www.padippakam.com

திணை

காலாண்டிதழ்



ஏப்ரல்-ஜூன் 2000

விலை ரூ. 12/-

படிப்பகம்

www.padippakam.com

திணை

பன்முகப்பண்பாட்டுப் புரிதலுக்கான காலாண்டிதழ்

ஏப்ரல்-ஜூன் 2000

சிறப்பாசிரியர்
பொன்னீலன்

ஆசிரியர்
எஸ். ஸ்ரீகுமார்

நிர்வாக ஆசிரியர்
சி. சொக்கலிங்கம்

இணையாசிரியர்கள்
ஹெச்.ஜி.ரசூல்
ச.அனந்தசுப்ரமணியன்
என்.டி.ராஜ்குமார்
நட.சிவகுமார்

சந்தா

தனிஇதழ் : ரூ 12/-
ஆண்டு சந்தா : ரூ 45/-

சந்தாக்கள் (M.O/ D.D)
படைப்புகள், நூல்கள்
விமர்சனங்கள்
அனுப்ப வேண்டிய முகவரி:

முனைவர் எஸ். ஸ்ரீகுமார்
சங்கீதா இல்லம்
பி.வி.குமார் தெரு
பொன்னப்பர்நகர்
நாகர்கோவில்-629 004.
✆:04652-28271

அச்சமைப்பு :
இமேஜ் ஆப்செட்,
வேப்பமூடு, நாகர்கோவில்.
✆:28039

புத்தக மதிப்புரைக்கு
இரு பிரதிகள் அனுப்புக.

உள்ளே . . .

கட்டுரைகள்

- நாவலாசிரியர் பொன்னீலன்
- முனைவர் ந.முத்துமோகன்
- சி.சொக்கலிங்கம்

சிறுகதை

- ஹெச்.ஜி.ரசூல்

கவிதைகள்

- ஆர்.அபிலாஷ்
- மீரான்மைதீன்
- ஜவஹர்
- ந.நாகராஜன்
- ச.அனந்தசுப்பிர மணியன்
- ச.கண்ணன்

மொழிபெயர்ப்பு

- ஏ.எம்.சாலன்

நூல் விமர்சனம்

- எஸ்.பிரேம்தாஸ்
- நட.சிவகுமார்
- வி.சிவராமன்

ஓவியங்கள்

- பெ.அன்பு
- ஸ்ரீதர்
- ஏ.வி.நாதன்

படிப்பகம்

www.padippakam.com

இந்தியக்கதை :

தத்துவம்

ஏகம் - அநேகம் - சாதியம்

ந.முத்துமோகன்

இந்தியாவின் மிகப்பழைய தத்துவங்களை ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள் அவற்றைப் பலவிதமாகப் பகுத்துக் காட்டியுள்ளார்கள். வைதீகம் /அவைதீகம், ஆத்திகம் / நாத்திகம், வைதீகம் / சார்வாகம், வைதீகம் / பௌத்தம், இன்னும் வைதீகம் / தாந்திரிகம் என்று பலவித எதிர்வுகளைக் கொண்டு இந்திய தத்துவப் பாரம்பரியத்தை விளக்க முயற்சித்துள்ளார்கள். மார்க்சிய அணுகுமுறையைப் பயன்படுத்தி பொருள் முதல் வாதம் / கருத்து முதல்வாதம் என்று பிரித்துக் காட்டியவர்கள் உண்டு. உலகின் உண்மைத்தன்மையை ஏற்ற தத்துவங்கள் / ஏற்காத தத்துவங்கள் என்று வகைப்படுத்தியவர்கள் உண்டு.

இந்த வகைப்படுத்தல்களில் நமக்கு ஒப்புதலும் உண்டு. சில வேளைகளில் வேறுபடுதலும் உண்டு.

இப்போது கொஞ்ச நாட்களாக மனதுக்குள் ஒரு சிந்தனை. பண்டைய இந்தியத் தத்துவம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படைப் பிரச்சினை ஏகாந்தம் / அநேகாந்தம் என்பதாக இருக்குமோ!

ஏகாந்தம் என்றால் கடைசி உண்மை ஒன்றுதான் என்பது. அநேகாந்தம் எனில் கடைசி உண்மைகள் பல என்பது. ஏகாந்தத் தத்துவம் என்று பெயர் பெற்றது வேதாந்தத் தத்துவம். அநேகாந்தம் என்று பெயர் பெற்றது சமணத்தத்துவம். கொஞ்சம் இவற்றை விரிவாகப் பார்ப்போம்.

ஏகாந்தச் சிந்தனையின் முதல் வடிவத்தை உபநிடதங்களில் காணுகிறோம். பிரம்மம் மட்டுமே ஒரே உயர்ந்த உண்மை, அது நிரந்தரமானது, அழியாதது, மாறாதது, புனிதமானது என்பது போன்ற சித்தரிப்புகளை உபநிடதங்களில் காணுகிறோம். பன்மையாகக் காட்சியளிக்கிற இந்த உலகமும் அதன் மாற்றங்களும் உண்மை அல்ல என்று அவை கூறும். பன்மைத்தன்மை கொண்டவை வெறும் தோற்றம்தான். அவை நிரந்தரமானவை அல்ல என்று உபநிடதங்கள் கூறும் பன்மியத்தை புனிதமற்றது, தாழ்ந்தது என்றும் அவை மதிப்பிடும்.

கி.மு. 1500-லிருந்து இந்தியாவிற்குள் நுழைந்து தம்மை நிறுவிக் கொண்ட ஆரிய இனக்குழுக்கள் கி.மு. 700-களை ஒட்டி உருவாக்கிக் கொண்ட தத்துவம் தாம் உபநிடதத் தத்துவம். ஆரிய இனக்குழுக்கள் தமது இருப்பு, தனித்துவம், உயர்வு, புனிதம் ஆகியவற்றை அகத்தே கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கிய கருத்தாக்கம் தான் பிரம்மம். இப்படி ஒரு கருத்தாக்கத்தை அவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? இந்தியாவில் ஏற்கெனவே வாழ்ந்து கொண்டிருந்த பல்வேறுபட்ட பூர்விக இனக்குழுக்களிடமிருந்து தனித்தநிலையில் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருந்தது. இந்தியாவின் பரந்துபட்ட இனக்குழுக்களுக்குள் தாம் எங்கே கரைந்து இல்லாமல் போய் விடுவோமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். இன அச்சம், (Ethnic Fear) இந்த அச்சமே தமது அடையாளங்களைப் புனிதமானவை யென்றும் தமது இருப்பை நிரந்தரமானதென்றும் ஒன்று பட்டதென்றும் உயர்ந்ததென்றும் இவர்களை வர்ணிக்கச் செய்திருக்க வேண்டும்.

தன்னை வரையறுப்பது என்பது தனது பிறிதை (Other) வரையறுப்பதோடு தொடர்பு கொண்டது. பிரம்மம் தன்னை வரையறுத்துக் கொண்டதோடு தனது எதிர்வையும் வரையறுத்துக் கொண்டது. தாமல்லாத பிறவற்றைப் பன்மையானவை என்றும் தாழ்ந்தவை என்றும் இருட்டானவை என்றும் புனிதமற்றவை என்றும் அது வரையறுத்தது.

யமுனைக் கரையிலும் மேற்கு கங்கை வட்டாரத்திலும் ஆரிய இனக்குழுக்கள் உபநிடதங்களை யாத்துக் கொண்டிருந்த அதே வேளையில் கிழக்கிந்திய வட்டாரத்தில் தாந்திரிகமும், சாருவாகமும், ஆசீவகமும், சமணமும், பௌத்தமும் அடுத்தடுத்து தோன்றி வளர்ந்து கொண்டிருந்தன. இந்தத்தத்துவங்களுக்கும் பூர்விக இனக்குழுக்களுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. ஆசீவக, சமண, பௌத்தச் சிந்தனையாளர்கள் இனக்குழு அரச குடும்பங்களைச் சார்ந்தவர்கள் என்று கூறுவார்கள். இனக்குழுக்கள் வரலாற்றுப் போக்கில் அழிந்து கொண்டிருந்ததைக் இவர்கள் கண்கூடாகக் கண்டார்கள். இனக்குழுக்கள் அழிக்கப்பட்டு அரசுகள், பேரரசுகள், தோன்றிக் கொண்டிருப்பதையும் இவர்கள் கண்டார்கள். அரசுகள், பேரரசுகள் நியாயப்படுத்தக் கூடிய அல்லது இனக்குழுக்களை அடியோடு அழித்து ஒழிக்கக் கூடிய மேலாதிக்க ஏகாந்தத் தத்துவங்கள் தோன்றிக் கொண்டிருந்ததை அவர்கள் கண்டிருப்பார்கள்.

இத்தகைய பின்புலத்தில்தான் சமணம் அநேகாந்தவாதம் பேசியது. சமணத்தைத் தோற்றுவித்த மகாவீரருக்கு முன்னால் 23 தீர்த்தங்கரர்கள் இருந்ததாகக் கூறுவதோடு அவர்களது நீண்ட நெடிய வாழ்க்கைக் கதைகளையும் சமணநூல்கள் கூறுகின்றன. இந்த வம்சாவளிக்கதைகள் கிழக்கிந்திய வட்டாரத்தில் சமணத்தின் பழமையைக் குறிக்கின்றன. சமணத்தின் அநேகாந்தவாதம் எல்லாவகைப் பட்ட ஏகாந்தவாதத்தையும் மறுக்கிறது. மொத்த உலகை அது ஜீவன் / அஜீவன் (உயிருள்ளவை / உயிரற்றவை) என்று பகுக்கிறது. ஜீவன் எனப்படும் உயிர்கள் பல. அவை

படிப்பகம்

www.padippakam.com

எண்ணிலடங்காதவை. உயிர்கள் ஒரே விதமானவையும் அல்ல. அவை பலதரப்பட்டவை. அஜீவன் எனப்படும் சடப்பொருள் உலகமும் பன்மைத்தன்மை கொண்டது. பூதலம், காலம், வெளி, மாற்றம், மாற்றமின்மை என அது ஐவகைப்பட்டது. மட்டுமின்றி சடப்பொருள் உலகம் முழுவதுமே அணுக்களால் ஆனது. பூதலம் மட்டுமின்றி காலமும் வெளியும் கூட அணுக்களால் ஆனவை. அணுக்களும் ஒரே விதமானவை அல்ல, பலதரப்பட்டவை. இவ்வாறாக சமணத்தின் எல்லாக் கோட்பாடுகளையும் அநேகாந்தவாதம் ஊடுருவி நிற்கிறது.

சமணத்தின் அறிவுத்தோற்றக் கொள்கையும் அநேகாந்தத்தையே பேசும். உண்மை அவரவர் அனுபவத்திற்கேற்ப பலப்பலவானது. யானை பார்த்த குருடர்கள் என்று ஒரு வேடிக்கைக் கதை உண்டல்லவா! அந்தக் கதை உண்மையில் சமணர்களின் அநேகாந்தவாதத்தை விளக்கத் தோன்றிய கதை. அது வேடிக்கைக் கதையல்ல. சீரியசான கதை. மனிதர்கள் அனைவருமே அவரவர் அனுபவத்தைக் கொண்டு உலகக் காட்சியைக் கண்டறிந்து சொல்லுகிறோம். உலகம் பற்றிய ஒட்டுமொத்தச் சித்திரத்தை நமது அனுபவங்களிலிருந்து சேர்த்து உருவாக்கிக் கொள்ள வேண்டியதுதான். அனுபவங்களையே பொய் என்று கூறிவிட முடியாது. எமது அனுபவங்களையெல்லாம் முட்டாள்தனமானவை என்று ஒதுக்கி விட்டு ஒரு மேதாவியின் கருத்தை முழு உண்மை என்று கொள்ள முடியாது.

சமணத்தின் அறிவுத்தோற்றக் கொள்கையில் சியாத்வாதம் என்று ஒரு கோட்பாடு உண்டு. சியாத் என்றால் "இருக்கலாம், இருக்கலாம்" என்று பொருள். உலகைப்பற்றிய உங்கள் கருத்தும் உண்மையாக இருக்கலாம். எனது கருத்தும் உண்மையாக இருக்கலாம். இப்படியும் சொல்லலாம், அப்படியும் சொல்லலாம் - என்பது போன்ற கொள்கை சியாத் வாதம். அநேகாந்த வாதத்தின் இன்னொரு வடிவம் இக்கொள்கை.

சமணத்தின் அகிம்சைக் கோட்பாட்டையும் அநேகாந்த வாதத்தின் நோக்கில் புரிந்து கொள்ள முடியும். உண்மைகள் பலவாக இருக்கும் போது, யதார்த்தம் பற்றிய புரிதல்கள், அனுபவங்கள் பலவாக இருக்கும் போது இந்தப் பன்மிய நிலைப் பாடுகளுக்கிடையிலான உறவுகள் எப்படிப்பட்டவையாக இருக்கவேண்டும்? அவை அகிம்சை உறவுகளாக இருக்க வேண்டும். வன்முறை அற்றவையாக இருக்க வேண்டும். சகிப்புத்தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். பல்வேறுபட்ட பார்வைகளுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். ஒரு பார்வை இன்னொரு பார்வையின் மீது மேலாதிக்கம் செலுத்துவதாக இருக்கக் கூடாது.

சமணத்தின் அநேகாந்தவாதமும் அகிம்சையும் அதிகாரம், மேலாதிக்கம், ஒற்றை நோக்கு, ஒற்றைப்புனிதம் ஆகியவற்றிற்கு எதிரானவை.

படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவின் ஒருபுறத்தில் ஒற்றை மையத்தைக் கட்டி மேலாதிக்கம் செலுத்த விழைந்த சக்திகள் உருவாகிக் கொண்டிருந்ததை சமணம் கண்டு கொண்டதோ!

சமணம் மட்டுமல்ல, இன்னும் சாங்கியம், வைசேடிகம் ஆகியவையும் கூட ஏகாந்தவாதப் பிரம்மத்தை ஏற்காமல் பன்மியம் பேசிய தத்துவங்கள் தாம்.

ஏகாந்தம் / அநேகாந்தம் என்ற நோக்கில் பண்டைய இந்திய தத்துவங்கள் ஒவ்வொன்றையும் இன்னொருமுறை கவனமாக வாசித்துப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது. அரசு, பேரரசுகள் தோன்றிக் கொண்டிருந்த அக்காலத்தில், ஆரிய இனக்குழுக்களுக்கும் பூர்வக்குடிகளுக்கும் இடையிலான உறவுகளை நிர்ணயிக்க வேண்டி இருந்த அக்காலத்தில் ஏகாந்தம் / அநேகாந்தம் என்ற பிரச்சினை தத்துவவாதிகளால் பேசப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

ஏகம் / அநேகம் என்ற மேற்குறித்த தத்துவ மற்றும் சமூகப் பிரச்சினைக்கு வைதீகம் கண்ட முடிவு வருண சமூக அமைப்பு; பின்னாளில் சாதிச் சமூக அமைப்பு.

பிரம்மம் தனது புனிதத்தையும் நிரந்தரத்தையும் நிறுவிக் கொண்டு, தன்னைத் தவிர்த்த பிறவற்றைத் தனது நோக்கில், தனது நலன்களின் அடிப்படையில் வரிசைப்படுத்திக் கொண்ட முறைதான் வருண-சாதிச் சமூக அமைப்பு. ஏக பிரம்மத்தின் தலைமையின் கீழ் பிற இனக்குழுக்கள் படிநிலை அமைவாக கட்டமைக்கப்பட்டதுதான் வருண-சாதி அமைப்பு.

பிரம்மம் தனது புனிதத்தைக் காத்துக் கொள்வதற்காகவும் முன்பு நாம் கூறிய இன அச்சத்தாலும் வருண-சாதி அமைப்பைக் கட்டிக் காக்கும் கோட்பாடாக அகமணமுறையை அறிமுகப்படுத்தியது. தமக்கும் பிறருக்குமான உறவை "ஒழுங்குபடுத்து"வதற்காக மட்டுமன்றி, பிற இனக்குழுக்கள் தமக்குள் கடைப்பிடிக்க வேண்டிய உறவாகவும் அகமண முறை விரிவாக்கப்பட்டது. வருண அதர்மங்கள் வரையறுக்கப்பட்டன. இந்த மொத்த அமைப்பிற்கு புனித அங்கீகாரமும் இறை அங்கீகாரமும் வழங்கப்பட்டன.

ஏகத்துவம் / அநேகத்துவம் ஆகிய இரண்டிற்குமிடையில் ஓர் இடைநிலையை (மத்திய மார்க்கம்) பௌத்தம் முயற்சித்ததாகத் தெரிகிறது. இன்னொருபுறம் வருண சாதிப்படிநிலை அமைப்பையும் அது மறுத்திருக்கிறது.

பிரம்மம், ஆன்மா, யக்ஞம் ஆகியவற்றின் அதிசயப்புனிதத்தை புத்தர் ஏற்றுக் கொள்ளவில்லை. சமணர்கள் பேசிய அநேகாந்தப் பன்மியத்தையும் புத்தர் ஏற்கவில்லை. சகலமும் சர்வாம்சமாக உறவு கொண்டவை என்று புத்தர் போதித்தார். ஒவ்வொன்றும் தனித்தனியாக நிறுவமுடியும் என்பதை அவர் ஏற்றுக் கொள்ள வில்லை. நாம் வாழும் இந்த வாழ்வு சர்வாம்ச உறவு

படிப்பகம்

www.padippakam.com

கொண்டது மட்டுமின்றி, இந்த உறவமைப்பு நிரந்தர மாற்றத்திற்கு உட்பட்டது. வாழ்க்கைத்தளத்தில் இந்த உறவமைப்பும் அதில் நிகழும் நிரந்தர மாற்றங்களும் முரண்பாடானவை. எனவே சம்பந்தப்படும் மனிதர்களுக்கு அவை துன்பத்தைத் தருபவை. இந்தத் துன்பங்களை விலக்குவதற்கு அறிவியல்ரீதியாக சில தீர்வுகளை அவர் முன்மொழிந்தார். இருப்பினும் தனித்தனி மனிதர்களாகத் துன்பங்களை விலக்கி 'விடுதலை' பெற முடியும் என்பதைப் புத்தர் நம்ப வில்லை. மாறாக மொத்த அமைப்பே செப்பம் செய்யப்பட்டு ஒட்டு மொத்த விடுதலையே (சர்வ முக்தி) சாத்தியம் என்பது புத்தரது நிலை.

வாழ்க்கைத்தளத்திலும் சரி, விடுதலைத் தளத்திலும் சரி புத்தர் வைதீகத்தின் ஏகத்துவத்தையோ, வருண சாதிப்படிநிலை அமைப்பையோ, இன்னொருபுறம் சமணத்தின் அநேகத்துவத்தையோ ஏற்கவில்லை.

வாழ்வு, விடுதலை பற்றிய புத்தரின் கட்டமைப்பு கற்பனாவாத கம்யூனிசம் போன்றது என்று அறிஞர்கள் கூறுவர்.

பக்தி இயக்கத்தின் தொடக்க காலத்தில் வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பண்பாட்டுத்தளத்தில் மீண்டும் அநேகாந்த எல்லைகள் உயிர்பெற்றன. அநேகக் கடவுளர்கள், அநேக வழிபாட்டுமுறைகள், வெவ்வேறு மொழிகளில், வெவ்வேறு வட்டார அடையாளங்கள், குறியீடுகளோடு துளிர்த்து எழுந்தன. அவை வைதீக ஏகத்துவத்தை மறுத்தன; சமஸ்கிருதத் தலைமையை மறுத்தன; யக்ஞத்தின் புனிதத்தை கேள்விக்குள்ளாக்கின. சமஸ்கிருதமோ வேதமோ அறியாத பக்தர்கள் ஊருக்கு ஊர் தோன்றினர். அவரவர் ஊரில் கடவுள்கள் சுயம்பாகப் பிறந்தார்கள். வைதீக யக்ஞத்தில் பிரபஞ்சம் ஒட்டு மொத்தமாக உற்பத்தியாகிற கதையை இவர்கள் நம்பமறுத்தார்கள். ஐந்து ராத்திரி இருட்டுக்குள் (பஞ்சராத்திரம்) அல்லது அவரவர் கோயில் கருவறைக்குள்ளிருந்து அல்லது அந்தந்த ஊர் அம்மனிலிருந்து உலக உயிர்களெல்லாம் உற்பத்தி செய்யப்பட்டன என்ற கதைதான் உண்மையாக இருக்கவேண்டும் என்று இந்த மக்கள் நம்பினார்கள். சாதி வருண அமைப்பைக் கவிழ்த்து விட்டு பக்தர்குலம் என்ற ஒரே குலத்தை உருவாக்கி விடலாமா என்று கூட இவர்கள் ஆசைப்பட்டார்கள்.

இந்திய நிலப்பரப்பின் பிரம்மாண்டமான இந்த அநேகத்துவ எழுச்சியை வைதீகம் சூத்திரர் இயக்கம் என்று சரியாகத்தான் புரிந்து கொண்டது. பக்தி தீட்டானது, மாயையானது என்று முத்திரை குத்திப்பார்த்தது. ஆனால் கட்டுப்படுத்த முடியவில்லை. அநேகம் புற்றீசல்களைப் போல முளைத்து எழுந்து கொண்டே இருந்தது. அந்தந்த வட்டாரங்களில் புதிய புனிதங்கள் தோன்றி வட்டார ஏகத்துவங்கள் நிலை பெற்றன. வைதீக ஏகத்துவத்தையும் படிநிலை அமைவையும் வட்டாரப் புனிதங்கள் அகப்படுத்திக் கொண்டன. வைதீகம் சிறிது நெளிவு சுளிவாக பக்தி மரபை ஏற்கத் துவங்கியது. வட்டாரப்

படிப்பகம்

www.padippakam.com

புனிதங்களோடு சமரசம் செய்து கொண்டது. தங்களை வைதீகர்கள் அங்கீகரித்ததில் வட்டார புனிதங்களுக்கும் சந்தோஷம்.

பக்தி அநேகத்தை கையகப்படுத்துவதில் வைதிகம் மிகவும் சிரமப்படவேண்டியிருந்தது. ஆங்காங்கே யார் யார் சொன்ன கதைகளுக்கோ கங்காஜலத்தைத் தெளித்துப் புனிதப்படுத்த வேண்டியிருந்தது. ஊர் ஊராக கறுத்த மனிதர்களோடு சென்று அவர்கள் கட்டிய கோயில்களுக்கு கும்பாபிஷேகம் நடத்த வேண்டிவந்தது. தாம் கடைப்பிடித்து வந்த 'ஒழுக்கங்களையெல்லாம் வட்டாரப்புனிதங்களுக்குக் சொல்லிக் கொடுக்க வேண்டி வந்தது. பிரபஞ்சத்தின் மையம் யக்ஞம் என்ற பழைய தத்துவத்தை ரகசியமாக வைத்துக் கொண்டு பிரபஞ்சத்தின் மையம் கோயில்தான் என்று பேச வேண்டி வந்தது. பிரம்மம், யக்ஞம், சமஸ்கிருதம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட வருண சாதிப்படிநிலை அமைப்பை இப்போது கோயிலை மையமாகக் கொண்டு மறுகட்டமைப்பு செய்ய வேண்டி வந்தது. அப்படியும் இப்படியுமாக எல்லாவற்றையும் சேர்த்துத் தைத்து மகாபுராணங்களை உருவாக்க வேண்டிவந்தது.

இன்னொருபுறம், இத்தனையையும் செய்த பிறகு பழைய பிரம்ம தத்துவத்தையும் காத்துக் கொள்ளவேண்டியிருந்தது.

கடுமையான சமரசங்களுக்குப் பிறகு எப்படியோ மீண்டும் அந்தப்படிநிலை அமைப்பு சில வேறுபாடுகளுடன் தக்க வைத்துக் கொள்ளப்பட்டது.

இஸ்லாமியர்கள் மீது ஏகத்துவக்காரர்களுக்கு ஏராளமான கோபம். எல்லா அரசர்களையும் போலத்தான் இஸ்லாமிய மன்னர்களும் படையெடுத்தார்கள், கொள்ளை அடித்தார்கள், மக்கள் மீது அடக்குமுறையையும், சுரண்டலையும் நடத்தினார்கள். கோபம் இவற்றால் ஏற்பட்டதல்ல. வைதீகம் இந்நாட்டில் கட்டி எழுப்பிக் கண்ணுக்குக் கண்ணாகக் காத்துவந்த சாதி அமைப்பை இஸ்லாமிய மன்னர்கள் போதுமான அளவு பேணிக் காக்கவில்லை. இஸ்லாமிய மன்னர்களுக்கு சாதிப்படிநிலை அமைப்பின் புனிதத்துவம் மீது விசேஷமான மரியாதை இல்லை. அவர்கள் மிகப்பிரும்மாண்டமான நகரங்களை உருவாக்கினார்கள், டாக்காவிலிருந்து துருக்கியின் கான்ஸடினாப் போல் வரை வணிக நகரங்களையும் போக்குவரத்துப் பாதைகளையும் உருவாக்கினார்கள். நகரங்களில் மாபெரும் கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள், நந்தவனங்கள், சமாதிகள் ஆகியவற்றைக் கட்டி எழுப்பினார்கள். பெருநகரங்களிலும் சிறுநகரங்களிலும் சந்தைகள், பஜார்கள் உருவாகின. இத்தனை மாற்றங்களுக்கும் பின்னால் ஏராளமான உடலுழைப்புச் சாதிகள் இருந்தனர். தோல்பதனிடுவோர், பட்டுநூல் தொழிலாளர், சாயம் காய்ச்சுவோர், கைவினைஞர்கள், கொத்தர்கள்,

படிப்பகம்

www.padippakam.com

தச்சுவேலைக்காரர்கள், கொல்லர்கள் என எண்ணிலடங்கா மக்கள் பகுதியினர் புதுவாழ்வு பெற்றனர். வணிகர்கள், வரிவசூலிப்போர், அரசுப்பணியாளர்கள், போர்வீரர்கள் எண்ணிக்கையில் பெருகினர். தீட்டுத்தொழில்கள் புரிந்தோர் என்று முன்பு கருதப்பட்ட பலர் இப்போது புதுப்பணக்காரர்கள் ஆனார்கள். சமூகத்தின் பல பகுதிகளில் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்ந்தன. சாதி அமைப்பு சடசடவென சரிந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டது.

மீண்டும் ஒருமுறை ஏகம் / அநேகம் என்ற பிரச்சினை முன்னுக்கு வந்தது. எப்படி? 10-17 ஆம் நூற்றாண்டுகளில் மையத்தில் இஸ்லாமிய மன்னர்கள் ஆட்சியிலிருந்ததால் வைதீகம் தற்காலிகமாகப் பலவீனமடைந்தது. வைதீகத்திற்கு எந்த விதத்திலும் குறைந்து விடாத ஒரு மாற்று ஏகத்துவக் கொள்கை இஸ்லாமியரிடமும் இருந்தது. ஆனால் வைதீகச் சாதி அமைப்பை அது சாராதது. எனவே அடித்தளச் சாதிகள் சமூகக் கட்டமைப்பில் மேல் நோக்கி நகருவதை அது அனுமதித்தது. அதற்கு அது இடமளித்தது. உடலுழைப்புச் சாதிகள், கைவினைஞர்கள், வணிகர்கள், பொருளாதார உபரியில் பங்கு பெற்றதும் சமூகத்தின் ஆன்மீக உபரியிலும் பங்கு கேட்டனர். அதாவது மேல்நோக்கி நகர்ந்த மக்களிடையில் அவர்களது சொந்த ஞானியர்கள் தோன்றி புதுமதமும் தத்துவமும் பேசினார்கள். சூபிகள், கபீர், மீராபாய், துக்காராம், நர்சி மேத்தா, தாதுதயான், பௌல்கள், சித்தர்கள், குருநானக் முதல் குரு கோவிந்தர் வரை என புதிய ஞானிகள் தோன்றி புதிய ஆன்மீகம் பேசினார்கள். இவர்களது தத்துவங்கள் எந்த வேர்களிலிருந்து இவர்கள் வெளிக்கிளம்பினார்களோ அந்தத்தத்துவங்களாக இருந்தன. இஸ்லாமுடன் நட்புறவு கொள்ளவும் இவர்கள் தயங்கவில்லை. வட்டார மொழிகளில் புனித நூல்கள் உருவாயின. பாரசீக, அராபிய, உருது மொழிச் சொற்களால் இறைவனைத் தொட இவர்கள் கூச்சப்படவில்லை. அராபிய, பாரசீக இசைக்கூறுகளால் இறை அனுபவத்தைத் தீண்ட இவர்கள் தயக்கப்படவில்லை.

இந்தியாவின் பின் இடைக்காலம் எனப்படும் இக்காலத்தில் வைதீக ஏகத்துவம் தளர்வு கண்டதாலேயே சமய, தத்துவ, கலாச்சார மற்றும் மொழித்தளங்களில் அநேகத்துவம் புதிய அனுபவங்களுடன் முன்னுக்கு வந்தது. பஞ்சாப், மராட்டியம், காஷ்மீரம், டில்லி, வங்காளம், ஆந்திரம் என இன்னும் பல பண்பாட்டு மையங்கள் உருவானதும் இக்காலத்தில்தான்.

ஏகம், அநேகம், சாதியம் என்ற சில நிலைப்பாடுகளின் நோக்கிலிருந்து இந்தியக் கதையைப் பேச நாம் முயன்றுள்ளோம். ஏற்கெனவே இந்தியா என வரையப்பட்டுள்ள சித்திரங்களோடு இன்னும் ஒன்று கூடுதலாக. முந்தியவை விளக்கத் தவறும் சில விஷயங்களை இச்சித்தரிப்பு விளக்கலாம்.

இக்கதையை 19-20 ஆம் நூற்றாண்டுகள் வரை இதே போக்கில் வளர்க்கலாம். ■

படிப்பகம்

www.padippakam.com

இரவற்ற வனத்தின் நுனியில் தொங்கும் இளவரசி

சிறுகதை

ஹெச்.ஜி.ரசூல்

கதீஜா முறைத்துப் பார்த்தபோது கண்கள் பிதுங்கி வெளியேசாடி தரையில் விழுந்தது. திரும்பவும் எடுத்துவைத்து ஒட்டிக்கொண்டாள். அடிக்கடி அடிவயிற்றின் ஆழத்திலிருந்து வெடித்துக் கிளம்பும் அலறலின் சப்தத்துளிகள் ஒவ்வொன்றும் சுற்றி நின்று பார்ப்பவர்களின் ஈரல் குலைகளைக் கிழித்து ஊடுருவிச் சென்றது. இந்தமுறை தர்காமுற்றத்தின் முன்வாசல் சுவரில் கதீஜாவின் தலை முட்டி மோதியபோது சுபுஹானல்லா . . சுபுஹானல்லா . . பதட்டத்துடன் ஓரிரு முக்காடிட்ட பெண்களின் மனம் பதைத்ததை உதடுகள் துப்பித்தீர்த்தன.

முன்னிரவுநேரமென்றால் சாம்பிராணி மணமெங்கும்பரவ கொளுத்திய வாசனைத்திரிகள் எரிய எரிய இது நிகழும். வெட்டவெளியில் அர்த்த ஜாமங்களில் கதீஜா அசந்துதூங்கியதை அடிக்கடி பார்க்கமுடியும் சங்கிலிகளால் கைகள் பிணைக்கப்பட்டவாறு. ஆட்டம் துவங்கினால் முடிய ஒரு மணிநேரம் கூட ஆகும்.

. . . உன்னாண அடங்கு, என்னாண அடங்கு, உன்னையும் என்னையும் படைச்ச நாயனால அடங்கு . . அடங்கச் சொல்லி அதட்டும் குரல்கள். முத்துமுகமது எலப்பையின் கையில் பிரம்போ, கம்போ ஏதேனும் ஒன்றிருக்கும். ரத்தவாறோடுகூடிய பதிவுகள் வரிவரியாய் உடலெங்கும் தெரியும் சிறிது நேரத்தில்.

சரிந்துவிழும் தாவணியையோ, கலைந்துகிடக்கும் வாசம்மறந்த கூந்தலையோ, அங்கஅவயங்களை மறைத்து ஷரீஅத்தைப் பேணுவதாகக் கூறும் பர்தாவைப்பற்றியோ கதீஜா கவலைப்படவில்லை.

கதீஜா வாசஞ் செய்திருந்த தர்காவின் பின்புறமுள்ள ஓலைசெட்டில் இரவு தூங்கவேண்டியது வரும். அருகே உட்கார்ந்து பார்த்துக் கொள்ள உம்மா. சுற்றிலும் வேடிக்கை பார்க்க முதுகிலும் கண்களைப் பொருத்திக்கொண்டு ஒரு கூட்டம்.

www.padippakam.com

தினந்தோறும் சியாரத் செய்ய யார்யாரோ கொண்டுவரும் பழக்குலைகள், பேரீத்தம்பழம், பூந்தி, பணியாரம், நேர்ச்சைசோறு எல்லாவற்றிலும் ஒரு சிறுபங்கு கதீஜாவிற்கும் உம்மாவிற்கும் கிடைக்கும். நேர்ச்சை வாங்க கூட்டம் அதிகமாகி நேர்ச்சை திகையாமல் போனால்கூட.

ஞாயிறன்று திங்கள்கிழமை, இரவு வியாழனன்று, வெள்ளிக்கிழமை இரவுநேரங்களில் கூடும் கூட்டம் நிரம்ப நம்பிக்கைகளின் மீது ஊர்ந்து கொண்டே திரும்பும். இத்தகைய இரவுகள் வந்துவிட்டாலோ ஓய்வெடுத்துக்கிடக்கும் கதீஜாவிலிருந்து இன்னொரு கதீஜா புறப்பட்டு வருவாள். சங்கிலிகள் அவிழ்த்துவிடப்படும். சுதந்திரமாக உடலும் மனமும் களைக்க களைக்க தெரிந்தவைகளையும், தெரிந்து மறந்தவைகளையும் பற்றி திரும்பத்திரும்ப சொல்லிக்கொண்டே, ஆட்டம். உரத்த ஊளைகளினூடே குழந்தைகளின் அழுகுரல்கள் பலநேரம் ஜோடி சேர்ந்து கொள்ளும்.

ரமலான் பிறையும் இரவின் வானத்தில்தான். மேகங்கள் ஒன்றுக்கொன்று மோதி மறைக்க நினைத்தாலும், குதூகலமும், சந்தோஷமும் நிரம்பி பூமியின் காலடிச்சுவடுகளில் ஒளிவிரிக்கும். இறைநாட்டமும், பரக்கத்தான நோன்பும், அந்திசாயும் மாலைகளில் மினரா வாசலில் வழங்கப்படும் நோன்புக் கஞ்சியும், ஐவேளையோடு தராவீஹ்தொழுகையும் ஒவ்வொரு முடிச்சுகளாகி தஸ்பீஹு செய்யும்.

ஷவ்வால் பிறை கண்டுவிட்டாலோ ஊரையெல்லாம் உறையவைக்கும் தக்பீர்முழக்கங்கள். ஸ்பீக்கரில் மிதக்கும் நாகூர்ஹனீபாவின் மக்கத்து மதீனத்து பெருமை பரப்பும் பாடல்கள் யாருக்காகவேனும் எள்ளளவேனும் மிச்சமிருக்காது. பெருநாள் தொழுகையின் புனிதம்பற்றிய மிதப்புகளில் இஷாகுருவிகளின் பாடல் கேட்கும். இறைச்சிக் கடைகளில் அறுக்கப்பட்ட கிடாய், மாடுகளின், ரத்தமும் சாலைக்குழிகளில் தேங்கிக்கிடக்கும், குர்பான் ரத்தமாய் மாறாததால் கவலையோடு. கூடவே பள்ளிமோதியார் கொண்டுவந்த சரியாய் தீட்டப்படாத கத்தியால் அறுத்த கிடாய் திரும்பவும் எழுந்துபோயாடி நின்ற விஷயமும்,

ரமலான் மாதம் புனிதமிக்கதென்ற லைலத்துல்கதர் இரவில் இறக்கப்பட்டது திருக்குர்ஆனின் முதல்வாக்கியம். ஒரு இறக்கையை

படிப்பகம்

www.padippakam.com

விரித்தால் வானமும் மறுஇறக்கையை விரித்தால் பூமியையும் மூடிவிடும் அறுநூறு இறக்கைகள் மலக்குகளுக்கு உண்டு. பறவையோ, மனிதனோ என திட்டவட்டமில்லாத உருவற்ற, ஒளியால் படைக்கப்பட்ட வானவர் ஜிப்ரீல் மூலமாக அந்த ஹிராமலைக்குகையில் ஓரிரவில் அண்ணல் நபிமுகமதுவிடம் எண்ணற்ற ரகசியங்களோடு இறக்கப்பட்டது திருக்குர்ஆன். ஸஹாபாக்கள், கலீபாக்கள், உலமாபெருமக்கள் திறை அந்த புனித இரவு எதுவென்று அறிய இயலவில்லை. ரமலானின் இறுதி பத்துநாட்களில் ஏதேனும் ஒரு ஒற்றைப்படை இரவாக இருக்கலாமென்ற நம்பிக்கையைத் தவிர. இரவுமுழுவதும் விழிப்பதும் பள்ளிவாசல்களில் முறாத்தீபும், திக்றும், ஸலவாத்தும், ஸகர்முடிந்தும் தொடரும். . .

மிஃராஜ் இரவென்பதோ ஏழுவானங்கள் கடந்த ஸிதரத்துல் முன்தஹா என்னும் வான்வெளி இலந்தைமரத்தை தாண்டிய மண்டலத்தில் எட்டுமலக்குகள் சுமந்து நிற்கும் அர்ஷுக்கு சென்று நபிகள் நாயகம் இறைவனை நேருக்குநேர்கண்டு ஐந்துநேரத் தொழுகையை வாங்கிவந்த இரவாகிவிட்டது. ஒரு கனவுப் பொழுதின் கணத்தில் நிகழ்ந்ததென்றாலும்.

நபிகள் நாயகம் மிஃராஜுக்குச் சென்ற வாகனம் 'புராக்' வித்தியாசமானது விலங்கின வடிவத்தில் குறிப்பாக கழுதைக்கும், கோவேறிக்கழுதைக்கும் இடைப்பட்ட வாகனமாக இருந்தது. பார்வைபடும் தூரம்வரை காலடியால் ஒரு எட்டுவைக்கும் அதிசய வெள்ளை நிற மின்னல்வேக வாகனமது.

கதீஜாவிற்கு உம்மா இந்த வரலாறுகள் ஹதீசுகளை எல்லாம் சொல்லியிருக்கிறாள். சின்னவயசில் ஓதப்போட்டது. யாசீனும் முப்பதுஜுசுவும் மதரசா சென்று ஓதிமுடித்தது, ஸ்கூலுக்கு அனுப்பியது, ஏழாம்வயசிலே படிப்பை நிறுத்தியது, எல்லாமும் சொல்வாள். அஞ்சுசென்று மனையை விற்று வாடகைவீட்டுக்கு குடிவந்தது, எட்டுபவுன் காசிமணிமாலையை விற்றுத்தீர்த்தது, பலசரக்குகடையில வாப்பா வேலைக்கு போனது என திருப்பி திருப்பி ஏதேனும் ஒன்றை இரவுகள்தோறும் உம்மா புலம்பியவாறு சொல்லிக்கொண்டிருப்பாள்.

படிப்பகம்

www.padippakam.com

லைலத்துல்கதர் இரவு, மிஃராஜ் இரவு, ஷவ்வால்பிறை கண்ட பெருநாள் இரவு எல்லாவித இரவுகளும் கதீஜாவிற்கு இப்போது ஒன்றுதான். எத்தகையதான வித்தியாசங்களும் இல்லாமல், புனிதமான நாட்களைப் பற்றிய உணர்வோ, பூரிப்போ இல்லாமல், சுழன்றோடும் சக்கரங்களுக்கடியில் வதைபட்டுக்கிடக்கும் கதீஜாவின் இன்றைய உலகம். இரவு பகலென்ற பேதமற்ற வேறொரு உலகமும் கதீஜாவிற்கு சொந்தமானது. துயரத்துடனும், அகழ்ந்து பார்க்கமுடியாத ஆழத்துடனும் இதயத்தின் பக்கங்களை சுக்கல் நூறாக கிழித்துப் போட்டவாறு.

இதுபோன்றதொரு லைலத்துல்கதர் இரவில்தான் கதீஜாவிற்கு இப்படி நேர்ந்தது. உம்மாவைக் கண்டமேனிக்கு அறுத்துக்கிழிச்சு திட்டுவதும், தங்கச்சியை தொந்தரவு செய்து திடீர்திடீரென அடிச்சுப்பிய்ப்பதும், கைக்கு கிடைத்த சாமானங்களை எல்லாம் தூக்கி வீசி எறிந்து கலகம் செய்வதும், வாப்பாவைக் கண்டால் அறைக்குள்போய் கதவைப் பூட்டிக்கொண்டு கதறுவதுமாய் அது நிகழ்ந்தது.

துபாயிலிருந்து வந்த பீருக்கண்ணு சாகிபின் மவன் இக்பால் உன்னை நிக்காஹ் செய்வதாக தான் கண்டகனவை உம்மா கதீஜாவிடம் நேற்றுச் சொன்னாள். பிணைக்கப்பட்ட சங்கிலியோடு கூடிய கதீஜாவின் ஆட்டம் இப்போது உச்சியெயிலில் லுஹருக்கு பாங்கொலித்த போதே அதிதீவிரத்தோடு துவங்கியது. எலப்பை கையில் பிரம்போடு வந்து கொண்டிருந்தார். முன்னூறு வயசான வேப்பமரம் உதிர்க்கும் இலைகளையும், பூக்களையும், காய்களையும் சுவாசித்துப் பழகிய காற்றுக்கு பூமிபிளந்து அதன் வேர்களை முத்தமிடமுடியாத கோபம். ■



படிப்பகம்

www.padippakam.com

ஆர். அபிலாஷ் கவிதைகள்

இந்த கண்ணாடியிடம்
முகத்தைக் காட்ட
பயமாய் இருக்கிறது
எப்போதும் என்னை
அழகாய் காட்டுகிறது.

❐

போர்க்களத்தின் நடுவில் நின்றவாறு
வெற்றி தோல்வியெனும் இலக்குகள்
ஏதும் இல்லாமல் போரிடுகிறேன்.
தப்பித்துச் செல்லும்
ஏதேனுமொரு பாதையை
தேடிச் சுழலும் விழிகள்.

❐

பெயர்ந்து செல்
பனித்துளியே!
சூரியக் கதிர்கள் ஊடுருவாத
இடம் நோக்கி

❐

மனசுக்குள்
புதைக்க மறந்து போன
உன் பிணத்தின்
அழுகல் நாற்றம்
ஒவ்வொரு சுவாசிப்பின் போதும்
வந்து வந்து கொல்லுது.

❐

ஊர்ந்து போகின்றது
புறாக் கூட்டம்
சிலுவைகள் சுமந்தபடி.

படிப்பகம்

www.padippakam.com

பாதையோரம் எங்கும்
சிதறிக் கிடக்குது
பிய்த்து எறியப்பட்ட
வெள்ளைச் சிறகுகள்
கவனிப்பாரற்று
மலைகளைச் சுமந்தவாறு
வானம் நோக்கி நீளும்
மிச்சமுள்ள சிறகுகள்.

❐

எழுதி எழுதி
கிழித்துப் போட்ட
கடிதங்களாய்
மரத்தின் காலடி எங்கும்
சருகுகள்

❐

பாதையோரம் கிடக்குது
ஒற்றைச் செருப்பு,
கடந்து போகும் பலகால்களை
தினம் தினம் பார்த்து

❐

அடிக்கடி பெய்யும் மழையில்
மண்ணில் விழுந்து
உடைந்து சிதறிய
துளிகளின் சடலங்கள்
இறைந்து கிடக்கின்றன
தெருவெங்கும் . . .

படிப்பகம்

www.padippakam.com

மீரான்மைதீன் கவிதைகள்

ஒரு நொடிப் பொழுதுக்குள்
என் மரணம் நிகழ்ந்து விட்டது
நான் எப்படி மரணித்தேன் என்பதை
உணரஇயலவில்லை
இப்போது
என் சடலத்தை குறித்த
துக்கத்தோடு நான்.

□

அவர்களுக்கு காது இல்லை
எங்களுக்கு வாய் இல்லை
நீண்டகாலமாகவே நாங்கள்
ஜன்னலும்
கதவுகளும்
சுவருமற்ற ஒரு அறைக்குள்

□

உன் அழகான
சிரிப்புக்கிடையே தெரியும்
கோரப்பற்களில் ரத்தக்கறை
நீ குதறிய
என் இதயத்தில்
ரத்தக் கசிவு

எனக்குத் தெரியாமலே
என்னைத் தின்றுவிடும்
உன்னோடு
வலி தெரியாமலே
வசமாகி நிற்கிறேன்.

படிப்பகம்

www.padippakam.com

தனியே என்னை சுமக்கவிடு
இந்தச் சிலுவையை
என் வலக்கையில் பின்னிவிடு
சிவந்த உன் விரல்களை மட்டும்
என்னோடு
நீயும் அறையப்படுவாய்
சிலுவையின் மறுபக்கத்தில்

கண்களால் நாம்
காணமாட்டோம்
காத்திருப்பேன் காதுகளால்
உன் மௌனத்திற்காய்.

❒

அலைகள் பட்டதும்
கால்கள் சுட்டது
இரவு நேர வெயிலில்

சலங்கை மணிக்குள் மாட்டிய
சித்தெறும்பு
கால்களால் பரண்டியது
முன்வாசல் கதவினை

சொர்க்கத்தில்
அடகு வைத்த வாழ்க்கை
எஞ்சிய கனவுகளுடன்

ரோஜா தொட்டிக்குள் கிடந்த
முட்டைத் தோடை
மனம் கொத்தியது
குஞ்சுகளின் ஞாபகத்தில்.

படிப்பகம்

www.padippakam.com

ந. நாகராஜன் கவிதைகள்

கவனமாய்
செதுக்கிய சிற்பத்தில்
கண் பழுது
ஆசையாய் கட்டிய வீட்டருகில்
ஒரு பாம்புப் புற்று

உண்மையாய்
நேசித்த உறவில்
ஒரு நெருடல்

உன்
அன்புக்கு ஆளான போது
பலருக்கும்
என் மீது பகை
உனக்கும் கூட

எப்படி கழியும்
எனது பொழுதுகள்?

❐

உனக்காக தவங்கிடக்கும்
ஒவ்வொரு முறையும்
நான் தோற்றுப் போகிறேன்

என் மொழிகள் எதுவும்
உன்னை எட்டவில்லை

பேசச் சொல்லிக்கொடு
மௌனமே மொழியாக

படிப்பகம்

www.padippakam.com

ஒன்றுக்கொன்று

நீ
வேசி எனப்புரியும்
உன்
முலைக்காட்சி கவர
புணர்ச்சி சுகம் நாடி
உன் பின்னால்
ஓடுபவர்களைக் கண்டு
பரிதாபமாய் இருக்கும்

என் நிதர்சனம் கண்டு
நெருங்குபவர்களை
சமயங்களில்
உன்
விஸ்வமான வெற்று நீட்டம்
மிரள வைத்து
மீறலைச் சிதைக்கும்
உன்
முகம் கிழித்து
உன் சாகசம் புரிய வைக்க
தவிக்கும் மனது
வலுவற்ற இறக்கைகளுடன்
இருட்டில் பறக்கும்
காயங்களோடு.

படிப்பகம்

www.padippakam.com

ச. அனந்த சுப்ரமணியன் கவிதை

யதார்த்தமற்ற வாழ்க்கை வாழ
போலியாய் திரியும் மனம்

மனம் உடையும் கணம்
தெரிவதில்லை உலகம்
உலகம் முழுதும்
விழிப்பின் ஊடே
ஓடிக்களித்து சுழித்து கழிகிறது

விழிப்பு மனம்
இருளின் தடமற்ற நிறங்களின் ஊடே
அமைதி கேட்டு

நிகழும் துக்கம்
துவக்கம் துடங்கி
போகும் பாதை தெரியா போகும்

கனவின் வானவில் மீது
மண்ணின் மழைக் கனவு தேக்கி
குட்டையை நோக்கி
தாவரக் கால் நீட்டும்

மண்ணும் மண்ணின் நிகழ்வும்
வானை நோக்கி
வாயேந்தும்
ருசித்துப் பார்க்க எச்சில் பழத்திற்கேனும்,

எரிநட்சத்திரம்
எதிர்புறமாய் ஓடம் ஏறி
நிலவை தொட
நிலவதிர்ந்து
ஓடிவந்து ஒளித்துக்கொள்ளும்

படிப்பகம்

www.padippakam.com

எந்தன் குழந்தையின்

மரக்கிண்ணியுள்

தலைநீட்டி கிண்ணி தண்ணியை கிழிக்கும்

குழந்தை தொட்டு சுகம் காணும்

கோப்பை ஏந்தி வரும்

மணம் கொண்ட எம் மனைவியின்

'டீ' க்கு நீ எங்கே?

டீக்குடித்து பில்டர் சிகரெட் பற்றவைத்து

அக்கவுண்ட்ஸ் எழுதி முடிக்கையில்

கோப்புகள் நாலாபுறமும் சிந்த

குழந்தை கொண்டு வந்த

குயிலிறகினை சூடிக்கொண்டேன்

நேற்றின் கணத்தில்

நிமிரும் முதுகின் பின்புறம்

வியர்வை வழிந்தோட

மானேஜர் வருகை நேரம் மிச்சமிருக்கையில்

அவன் கேட்டான்

ஐயா எங்களுக்கு

நாளை சம்பளம் போடுவார்களா

என் நாக்கு நுனியிலும்

அந்த கேள்வி தான் தொங்குகிறதென்பது

அவனுக்கு எப்படி தெரியும்?

படிப்பகம்

www.padippakam.com

ச. கண்ணன் கவிதை

சட்டையை அணிந்தால்
அவனுக்குள்ளேயே ஓர் வீரியம்
பார்ப்பவர்கள் இவன் சட்டையை
பெரிதாக சொல்வார்கள்.
இவனும் அத்தனை அழகு
ஓரக்கண்ணால் தன் சட்டையை பார்த்து
நெஞ்சுயர்த்தி கொள்வான்
சட்டையை பற்றி கேட்போரிடம்
அது பிறந்த கதை
வாங்கிய கதை தைத்தயிடமென
அதன் மதிப்பை ஒன்றுவிடாமல்
வீட்டுபடியில் கால்படுமுன்
கை பித்தானை கழற்றிவிடும்
சுவரில் தொங்கும் புதிய சட்டைக் கூட்டத்தின்
ஓரத்தில் இதுவும்
எனது ஒரு வாரத்து பழைய சட்டை
புடக்களை வாளி நீரில்
சட்டையில் அடித்த ஸ்பிரேயும்
மனுச வாசமும் சண்டைபோட்டுக்கொள்ளும்
இரண்டு பேரையும் இல்லாமலாக்கிவிடும்
சர்ப் சலவை
முற்றத்தின் துளசிமாடமும்
அருகிலிருக்கும் மல்லிகைக் கொடியும்
வீடு முழுமையும் அதன்
இருப்பை வெளிப்படுத்தும்
எனது மூக்கு சுற்றும் பார்த்து
தன் கக்கத்து வாசத்தில் முகம் பதித்து
லயித்துப்போகும் சில நிமிடம்
யாருமில்லாத எல்லா தர்ணங்களிலும்
படுக்கையறையிலும்
அவளின் உள்ளாடைவரை
களற்றி முடிப்பதே
எனது முதல் வேலை.

படிப்பகம்

www.padippakam.com

இந்த உலகம் எழுதப்படாத கதைகளால் நிரம்பியிருக்கிறது. . .

மொழிபெயர்ப்பு

தமிழில்:- எ.எம்.சாலன்

மலையாள மூலம்:- எம்.டி.வாசுதேவன் நாயர்

'எளிமையானக் கலையே மகத்தான கலை' என்பது ஒரு பழைய கிரேக்கப் பழமொழி. இக்காலக் கட்டத்தில் இதற்குரிய ஒரு பொருத்தமான உதாரணம் தான், ஹெமிங்வேயினுடைய 'கிழவனும் கடலும்'. இவரால் படைத்தளிக்கப் பட்ட படைப்புகளிலேயே மிகமிக எளிமையானதும் கனமானதும் இதுதான்.

வாழ்க்கையிலிருந்து தேர்ந்தெடுத்த நிகழ்ச்சிகளை நாம் கலைப் படைப்பாக்கும் பொழுது, நான் முன்பொருமுறை குறிப்பிட்டது போல், வெறும் களிமண்ணில் கூட நரம்புகளையும் ரத்தத்தையும் உணர்ச்சிகளையும் உருவாக்க முடியும். மனிதர்கள், நிகழ்ச்சிகள் இவற்றுடன் தொடர்புடைய சுற்றுப்புறச் சூழல்கள், இயற்கையில் காணப்படும் நிறங்கள், நிறபேதங்கள், சுகம் தரும் வாசனை-என இவையெல்லாவற்றையும் தெரிந்து கொள்ளும் போதுதான் சேகரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒரு படைப்பாளியின் கையில் களிமண்ணாகிறது. கலையாக உருமாறுகிறது.

என்னுடைய பார்வையில் சிறுகதையைப் பற்றி மிகத் தெளிவான கண்ணோட்டமுள்ள ஒரு படைப்பாளி, ஜஸ்டுவேர்ட். இவர் ஒரு அமெரிக்கர்.

'ஒரு சிறந்த சிறுகதையானது நல்ல கவிதைக்கு ஒப்பானதாகும்'.

'நல்ல சிறுகதை, ஓர் கவிதைக்கு நிகரானதாகும்'.

'நாம் நினைத்தால் அதை வேகமாக வாசித்து முடித்துவிடலாம். அதே வேளையில் அதை நாம் இடையில் வைத்து நிறுத்தி விட்டோமானால் அதனுள்ளே இருக்கும் சில மிகச் சிறந்த கருத்துக்கள் நம் கண்ணில் படாமல் போக வாய்ப்புண்டு'. ஒரு இடத்தில் ஜஸ்டுவேர்ட் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

அவர் கென்ரக்கி மலைப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்தவர். அவர் சிறுகதைத் துறையில் கால் எடுத்து வைக்கத் துவங்கிய காலத்தில்,

படிப்பகம்

www.padippakam.com

அன்று பிரசித்திப் பெற்றிருந்த எலிசபெத் மாடோக்ஸ் ராபர்ட்ஸ் என்ற நாவலாசிரியைக் காண நேர்ந்தது. ஐஸ்டுவேர்ட் அவரிடம் படைப்பாக்கம் சம்பந்தமாக சில உபதேசங்கள் தரும்படி வேண்டினாராம். அதைக் கேட்டதும் அந்த நாவலாசிரியை கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டாராம்:

"ஐஸ்டுவேர்ட், கென்ராக்கி மலைகளிலிருந்தா என்னைக் காண வந்தீர்கள்? அந்த மலைகளின் முதுகில் - சில சின்னஞ்சிறிய விலா எலும்புகள் நீண்டுகிடப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அவைகள் உங்கள் கதைகளின் பிரதானக் கதாபாத்திரங்களாகட்டும்!" என,

படைக்க வேண்டிய முறைகளைப் பற்றி தனக்குக் கிடைத்த மிக நல்ல உபதேசமாக அதை ஏற்றுக் கொண்ட ஐஸ்டுவேர்ட், அதை நினைத்துப் பார்க்கிறார்.

ஆரம்பகால எழுத்தாளர்களை மனதில் கொண்டு ஐஸ்டுவேர்ட் நல்கும் உபதேசமும் குறிப்பிடத்தக்கதே.

'இந்த உலகம் எழுதப்படாத கதைகளால் நிரம்பியிருக்கிறது. அவற்றையெல்லாம் உட்கொண்டு படைப்பாக மாற்ற வேண்டியதே உங்களுடைய வேலையாகும். முக்கியமல்லாதவைகளை நீக்கிவிட்டு முக்கியமானவற்றைப் பொறுக்கி எடுப்பதே நாம் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சனை'.

சிறுகதைகள் படைப்பதற்கென, பிரத்தியேகமான ரீதி (Formula) எதுவுமில்லை. அப்படி கதை ஃபார்முலாவாகக் கருதிய சிறுகதையாசிரியர்களிடையே ராஜாவாகக் கருதப்பட்ட ஓஹென்றி பிறகு, கடுமையான விமர்சனங்களுக்குள்ளானார். கடைசி பத்தியில் எதிர்பாராத ஒரு சம்பவமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஓஹென்றி, வாசகர்கள் நடுங்கும்படியாக தன் கதைகளின் இறுதிப்பாகத்தை அமைப்பவர். 'அவரால் பின்பற்றப்பட்டு வந்த இந்த 'வித்தை' பிற்காலங்களில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பரவி, அந்நாடுகளிலுள்ள பல சிறுகதையாசிரியர்களின் கதைகள், ஓஹென்றியின் நினைவால் 'ஓஹென்றி டுவிஸ்ட் என்ற ஃபார்முலாவாகவே மாறிற்று, என பிரபல இலக்கியவாதியான ஃபிராங்க் ஓக்கோணர் குறிப்பிடுகிறார். செகோவினுடைய ஆரம்பகாலக் கதைகளோடு, ஓஹென்றியினுடைய 'புத்தகம் பூட்டி வைக்கப்பட்டது' - என இலக்கிய விமர்சகர் வால்டர் அல்லன் குறிப்பிடுவார்.

படிப்பகம்

www.padippakam.com

நம்மால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ‘அந்த பாகம் (வாழ்க்கையிலிருந்து சீவியெடுக்கப்பட்ட நறுக்கு) ஜீவிதத்தினுடைய எந்தப் பாகத்தைத் தொட்டுநிற்கிறது; தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் அவ்விஷயம் நிற்குமா? என்பவைகளைப் பற்றிய நம்முடைய தீர்மானம் இங்கே ரொம்ப முக்கியமாகும். காரணம், அனேக ராத்திரிகளும் பகலுகளும், கொள்ள வேண்டியவைகளைப் பற்றியும் தள்ள வேண்டியவைகளைப் பற்றியும் நாம் தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பம் அது. நாம் தீர்மானிக்கக்கூடிய அந்த சந்தர்ப்பம் அல்லது குறிப்பிட்ட நிமிடத்தைப் பற்றி, பரீட்சார்த்தமாக நாடகம் நடத்திப்பார்ப்பதற்காக முயன்ற ஒரு புதிய அயர்லாண்டு நாடக ஆசிரியரிடம் டபிள்யு.பி.ஏட்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

‘நீ, ஒரு நாடகம் எழுதத் துவங்கும் முன்பு, அது பத்தாம் நூற்றாண்டிலுள்ள கான்ஸ்டாண்டி நோபிளைப் பின்புலமாகக் கொண்டு நடைபெற்றதாக நினைத்துக் கொள்ள வேண்டும். பிறகு பதினான்காம் நூற்றாண்டில் பிரான்ஸில் வைத்து நடந்ததாக, அதன் பிறகு இன்றைய அயர்லாண்டின் பின்புலத்தில்; ஆக, இப்படி மூன்று காலங்களிலும் மூன்று பின்னணிகளிலும் நீ எடுத்துக் கொண்ட விஷயம் மிகப் பொருத்தமான ஒன்றாக, உனக்குப் படுமேயானால், நீ நாடகத்தைப் படைக்க ஆரம்பித்து விடு’.

காலம், இடம், சமூகம் - என இவைகளின் எல்லைகளையும் கடந்து-ஜொலித்து நிற்கக் கூடிய கலையின் தத்துவத்தைப் பற்றி மிக அழுத்திச் சொல்வதற்காக வேண்டியே ஏட்ஸ் இதைச் சுட்டுகிறார்.

மிகவும் பிடித்தமான ஒரு விஷயம் நம் கையில் கிடைத்ததும், அதை அருமையான ஒரு படைப்பாக மாற்றுவதுதான் அடுத்ததாக நாம் சந்திக்கக்கூடிய பெரிய பிரச்சனை. ஒரு நிகழ்ச்சியை - ஒரு கதாபாத்திரத்தை நாம் பல ரீதிகளில் அணுகமுடியும். சில வேளைகளில், படைப்பாளி தன் கைகளைக் கட்டியபடி விலகி நின்று சம்பவங்களைத் தரிசிக்கலாம்... கேட்கலாம்! சில வேளைகளில் ஒரு கதாபாத்திரத்தை தன் வழியே (தாம் கண்ட அல்லது அனுபவித்த) சம்பவங்கள் வெளிப்படுத்தப்படலாம். இவைகள் இப்படித்தான் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற வரம்பு ஒன்றும் கிடையாது. ‘இவைகள் எந்த ரீதியில் வெளிப்படுத்தப்பட்டாலும் நன்றாக இருக்கும்’ என்ற மிகச் சாதாரண வரம்பு மாத்திரம் இதற்குப் போதுமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

'உலகப் பிரசித்திப் பெற்ற பத்து-இருபது கதைகளைத் தேர்ந்தெடுத்துச் சொல்' -என, என்னைக் கேட்டால், நான் முதலில் குறிப்பிடக்கூடிய ஒரு பெயர் இருக்கிறது; ஜெ.டி. சேலஞ்சரினுடைய ஃபார் எஸ்மெ வித் லவ் அண்ட் ஸ்குவாலர்.

இது மிக எளிமையான கதை; நாம் எல்லோரும் சுலபமாகப் புரிந்து கொள்ளும் முறை. பழைய கால சம்பவங்களை நவீன காலத்திற்கு எடுத்துச்சொல்லும் நனவோடை உத்திமுறை -இக்கதைக்குரிய உருவமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

ஒரு திருமண அழைப்பிதழ் வருகிறது. அவ்வேளையில் பல வருடங்களுக்கு முன்பு ராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் போது தான் சந்தித்த ஒரு இளம்பெண் தன் மனத்திரையில் வந்து தோன்ற, அது அங்கே குறிக்கப்படுகிறது. பிரம்மாதமான வாசகங்கள் ஒன்றும் அங்கே காணப்படவில்லை. கண்ணீர் இல்லை. ஆனால் அதே நேரத்தில் அந்தக் கதையைப்படித்து முடிக்கும்பொழுது, எங்கோ ஒரு மூலையில் அது நம் இதயத்தைக் குளிரச் செய்துவிடுகிறது. சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து படைக்கும் படைப்பாளி-இந்த சேலஞ்சர்.

'பிரைட்டி மவுத் அண்ட் கிரீன்மை எந்தஸி' யில் தீட்சண்யம் மிகுந்த விகாரங்களே, பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதன் உள் அடுக்குகளைப் பற்றிக் குறிப்பிடப் போனால், காதல், வஞ்சனை, பாலியல் விவகாரம் - போன்றவைகள் இதன் உள்ளடக்கமாகக் கொள்ளப் பட்டுள்ளன.

ஒரு கணவன் தன் மனைவியைக் காணாததால், தொலைபேசி மூலமாக தன் நண்பனைக் கூப்பிட்டு கேட்கிறான். அவளைக் காணவில்லை. அவளைப் பற்றிய விபரம் ஒன்றும் கிடைக்கவில்லை, என நண்பனோ பல சாக்குபோக்குகளைச் சொல்லி அவனை சமதானப்படுத்துகிறான். அந்த வேளையில் கணவனால் தேடப்படும் அப்பெண் நண்பனின் படுக்கையிலுள்ள பஞ்சுமெத்தையின் மேல் படுத்திருக்கிறாள்.

அப்பெண்ணின் கணவனோ, தன்னுடைய மனக் கஷ்டங்களையும், வீடு வராத மனைவியைப் பற்றியும் சொல்லி, தன் நண்பனையும் சங்கடத்திற்குள்ளாக்கி விட்டோமே என நினைத்து சுயம் நொந்து கொள்ளுகிறான்.

படிப்பகம்

www.padippakam.com

மீண்டும் அவளுடைய கணவனிடமிருந்து டெலிபோன் வழியே ஒரு அழைப்பு வருகிறது. இந்த முறை, அவனுடைய நண்பன் ஒரு பொய்யை அவிழ்த்த விடுகிறான்.

'நான் உன்னைக் கூப்பிட்டு தொந்திரவு செய்துவிட்டேன்'. என அக்களங்கமில்லாதவன் (அப்பெண்ணின் கணவன்) தன் பிரியமான நண்பனிடம் மாப்பு கேட்பது போல சொல்லிவிட்டு டெலிபோனைக் கீழே வைத்து விடுகிறான்.

அவன் மனைவி, அப்போதும் அவனுடைய நண்பனின் மெத்தையில்தான் படுத்திருந்தாள்.

எடுத்துச் சொல்லப்போனால் வால்யூம் வால்யூம்களாக எழுதவேண்டிய கனமான உள்ளடக்கத்தைக் கொண்ட இக்கதை, மிக எளிமையாகவும் சுலபத்தில் புரிந்து கொள்ளும் முறையிலும் எழுதப்பட்டிருக்கிறது.

உருவத்தைப் புற்றி (கதை வடிவம்) நான் அளவுக்கு அதிகமாகப் படித்து, தெரிந்து கொண்டது சேலஞ்சரினுடைய 'உருவமில்லாத உருவத்திலிருந்துதான். (Shepelessness) என ஒரு முறை அப்டைன், குறிப்பிட்டார்.

'இதுவரையில் உலகம் கண்ட மிகப்பெரிய சிறுகதையாசிரியர் அந்தோன் செகோதான்' என பலராலும் செக்கோ குறிப்பிடப்படக்கூடியவர். சிலசமயங்களில் இந்தத் துறையில் செகோவும், மாப்பசானும் போட்டி போடுவது போலக்கூட நமக்குத் தோன்றும், சில இலக்கிய வரலாறுகளை எடுத்துப் படிக்கும் பொழுது.

ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்த மாப்பசானின் கதைகளில் கூடுதலும் அவரது கதைகளின் உருவம் அல்லது சித்தரிப்பு முறை சரியாகக் கையாளப்படவில்லை என்ற குறைபாடுகளும் இலக்கிய விமர்சகர்களால் முன் வைக்கப்படுவதுண்டு.

டால்ஸ்டாய், ஒரு முறை செக்கோவை 'ரஷ்யாவினுடைய மாப்பசான்' என விசேஷமாகக் குறிப்பிட்டார்.

அந்தோன் செக்கோவ், மாப்பசான், மாக்சீம் கார்க்கி, துர்கனேவ், கிப்லிங், கோப்பார்டு, லியோ ஆஃப்லா ஹெர்ட்டி, பாங் ஆக்காணர், ஷான் ஆஃப்ளைன் - இவர்களுடைய கதைகள் அனைத்தும் நம்மை சுண்டி இழுப்பது, அவைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும்

www.padippakam.com

உத்திமுறைகளினால்தாம்! அது மட்டுமல்ல. கதைகளின் கனமான உள்ளடக்கத்திற்கும் இதில் முக்கிய பங்குண்டு. படிப்பதற்குச் சுவையாக இல்லாவிட்டாலுங்கூட, அந்தக் குறைபாட்டினை தன் கதையின் வலிமையினால் சரிக்கட்டிவிடுபவர் காண்ராடு.

ஜேம்ஸ் ஜாய்சும், டி.எம்.லாரன்சும் 'சிறுகதையாசிரியர்கள் என்ற நிலையில் இலக்கிய உலகில் நின்று கொண்டிருப்பார்கள். யுலிஸினுடைய விஷயத்தில் இம்மாதிரியான குறுக்கீடுகள் ஒரு போதும் ஏற்பட்டதில்லை.

சேலஞ்சருக்குப் பிறகு வந்த அமெரிக்க எழுத்தாளர்களில் ரோனால்டு பர்த்தல்மி மட்டும் தான், வார்த்தைகளாலும் வாக்கிய அமைப்புகளாலும் விளையாட்டுக் காட்டக்கூடியவர். ஜாய்ஸ் காரென் ஆட்ஸ், ஷர்லி ஆண்ட்ரூ, ஜான் ஆப்டெக், பிளானெரி, ஆக்காணர், ஜாண் பர் ஆகிய அனைவருமே கனமான உள்ளடக்கம் கொண்ட கதைகளைப் புரிந்து கொள்ளும்படி நம்முன் வைப்பவர்கள்தாம்!

எழுதுவது பற்றி ஜாய்ஸ் ஒருமுறை குறிப்பிடும்போது Silence exile and cunning எனக்குறிப்பிட்டார். அமைதியாக சுயம் அகன்று நின்று அற்புதத்தோடு நாம் விஷயங்களைச். (materials) சேகரிக்கிறோம். ரகளைக்கிடையில் மௌனம் ஏற்படும் போது, நாம் நமது படைப்புக்குத் தேவையானக் களிமண்ணை' (இங்கே இது materials எனஎடுத்துக் கொள்ளப்படவேண்டும்) நாம் தனிமையாக்கப்படும் வேளைகளில் கூட கண், காது, இதயம் இவைகளை விட்டுவிட்டு வந்த அந்த உலகத்திலேயே தான் நாம் இருந்து கொண்டிருப்போம். சில வேளைகளில் நமக்குத் தேவையானவைகளைத் தட்டிப் பறித்துக் கொள்கிறோம். தெரிந்தோ தெரியாமலோ, நாம் மூன்று வழிகளினூடே (மேலே குறிப்பிட்ட) நம் படைப்பே உருவாக்கிக் கொள்கிறோம், என ஜாய்ஸ் குறிப்பிடுகிறார்.

இன்னொர் இடத்திலும் அனுபவங்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

வைக்கம் முகமது பஷீர் தனது சுய அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டே அனைத்துக் கதைகளையும் படைத்தார். சொல்லப்போனால், அவரால் படைத்தளிக்கப்பட்ட கதைகளின் வலிமையே (கதைகளுக்குள் கொண்டு வரப்பட்ட) அவரது சொந்த அனுபவங்கள் தாம். பொற்றேகாட்டைப் பொறுத்தமட்டில், சுய அனுபவங்களின்

படிப்பகம்

www.padippakam.com

அடிப்படையில் பிறந்த கதைகளில் ஜொலித்து நிற்கும் அழகு, ஏனைய கதைகளில் காணப்படுவதில்லை.

அவரது படைப்பான 'சந்தர்சனத்தில் (வருகை) வயநாட்டின் இயற்கை எழிலைக் காணமுடியும். பழைய கூலிக்காரர்களின் வீடும், சுற்றுப்புறமும் அதில் வரும் கதாபாத்திரங்களும் இவ்வளவு ஆண்டுகள் ஆனபிறகும் கூட என் கண்முன்னே இப்போதும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. முப்பது வருடங்களுக்குப் பிறகும் கூட தேவயானியும் அவளது தோழியும் கவிஞரின் படகு பைத்தியத்தையும் என்னால் காணமுடிகிறது. வெள்ளி நாணயத்தைப் போல பொங்கிவரும் நிலவை -நான் நினைத்துப் பார்க்கிறேன். படகின் ஒரு மூலையில் மீன்கொத்திப் பறவைப் போல அமர்ந்திருக்கிறாள் தேவு. அவள் கட்டிலின் மேல் படுத்திருக்கிறாள் என எண்ணி கீழே பாயை விரிக்கிற கார்த்தியாயனி, தூரத்துச் சொந்தத்தில் பட்ட அவளுடைய வார்த்தைகளை இன்னும் கூட என்னால் மறக்க இயலவில்லை. அவளது பிஞ்சு வெள்ளரிக்காய் போன்ற முகம், மறக்க முடியாத இளம்பருவத்து காதல் நினைவுகள் போல என் மனதுள் இப்போதும் நிலைத்திருக்கிறது. ■

சனரஞ்சக சர்வாதிகாரம்

எம்டிவி நம் வீடுகளில் நுழைந்திருக்கிறது. டெப்சி விளம்பரங்கள் நம்மைப் பாதிக்கின்றன. நுகர்வுக் கலாச்சாரம் பெருகிய நிலையில் பின் நவீனத்துவக் கலாச்சாரமாக மாறுகிறது. பிம்பங்களும் சொல்லாடல்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. குறிகளின் உற்பத்தியும் நுகர்வும் நம் காலத்தின் போக்காக மாறுகின்றன.

அரசியல் ஒரு கேளிக்கையாக இன்று மாறியிருக்கிறது. கேளிக்கையான அரசியலில் சனரஞ்சகமாக அரசியல் அதிகாரம் மாறியிருக்கிறது. உயர்கலாச்சாரமும் வெகுமக்கள் கலாச்சாரமும் தனித்தனியாக இருக்கின்றன. இவற்றைத் தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டியதில்லை என்பதைப் பின் - நவீனத்துவம் மறுக்கிறது. செவ்வியல் இலக்கியத்தில் முன்பு இடம்பெற்ற இராமனை இன்று கேளிக்கை அரசியல் மூலம் வெகுமக்கள் மத்தியில் எடுத்துச் சென்றிருக்கின்றனர். அரசியல் இங்கு கேளிக்கை அல்லது கொண்டாட்டமாக மாறுகிறது. பேரணிகள் ஊர்வலங்கள் மூலம் இந்தக் கொண்டாட்டம் நிகழ்கிறது. குறிகளின் உற்பத்தி இதைச் சாத்தியப்படுத்துகிறது. பல்வேறு பிம்பங்கள் குறிகளின் உற்பத்தி தொடர்கிறது. பின் நவீனத்துவம் இதை விளக்குகிறது.

-அமெரிக்க மார்க்ஸியர் பிரடெரிக் ஜேம்சன் நூல்
அறிமுக கட்டுரையில் இரவி கண்ணன். நன்றி : நிகழ்.

படிப்பகம்

www.padippakam.com

சில குழந்தைகள் சில அனுபவங்கள்

சி. சொக்கலிங்கம்

குழந்தையின் மன உலகம் பெரியவர்கள் மறந்துபோன உலகம் மட்டுமல்ல நினைவுபடுத்தக்கூட நேரமற்றுப் போனவர்களின் உலகமும். தம் குழந்தைக் காலத்தை மறந்துபோன அப்பனும், அம்மையும். குழந்தைக் குதூகலங்களை மறந்துபோன ஆசிரியர்கள். இவர்களுக்குப் போட்டியாக குழந்தை மனதை காயடிக்கும் தகவல் ஊடகங்கள். இதுதான் நம் குழந்தைகளுக்கான புற இருப்புகளுள் சில. இதனைத் தவிர்க்கத், தொலைக்கத் துடிக்கும் மனத்தோர் உண்டு. ஆனால் காரியபூர்வப் பார்வை இன்னும் உருவாகவில்லை. ஒரு தாய் தந்தை மதிப்பீடு பல காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. அதில் ஒன்று: அவர்கள் குழந்தைகள் என்ன வேலை பார்க்கிறார்கள்? என்ன சம்பளம் வாங்குகிறார்கள்? நம் நாட்டிலா? இல்லை வெளி நாட்டிலா? என்ற அளவுகோல் பார்வை. இதன் தொடர்ச்சியாக 'சமூக' மதிப்பீட்டிற்கு இணையாக தம் மகவை உருவாக்கித் தரும். 'ஒளிருவாள் அருஞ்சமம் முறுக்கித் தரும்' பட்டறை எது? – என பெற்றோர்கள் பள்ளிகள் தேடி, கல்லூரிகள் தேடி அலைகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் தரமான, செல்லுபடியாகக்கூடிய சந்தை மதிப்பீடுள்ள சாதனங்களை உற்பத்தி செய்யும் கேந்திரங்கள். இது கிராமம் தகர்த்து நகரம் சாரலாம். தாய்மொழி தவிர்த்து பிறமொழி சாரலாம். நோக்கம் ஒன்றே – சந்தையில் செலவாகுமா?

நான் என் வீட்டின் அறையில் புத்தகங்களைக் குடைந்து புதிய கண்டுபிடிப்பை நெருங்க முயற்சித்துக் கொண்டிருந்தேன். அப்போது மழைநேரம். இடி இடித்துக் கொண்டிருந்தது. என் மூத்த மகள் தீபா அவளுக்கு 4 வயது, அடுத்த மகள் சுபா 3 வயது – இருவரின் உரையாடலும் கேட்டது.

சுபா : மக்கா, சாமி எங்க இருக்காரு?

தீபா : 'மானத்திலே'.

சுபா : இடி எங்க இடிக்கும்?

தீபா : மானத்தில

சுபா : அப்போ இடி இடிக்கும்போது சாமி என்ன செய்வாரு?

தீபா : இடி இடிக்கும்லா அந்த இடத்தவிட்டு வேற இடத்துக்கு குடுகுடுண்ணு ஓடிருவாரு.

சுபா : மின்னல் வந்தா என்ன ஆகும்?

தீபா : மானம் கீறும்.

படிப்பகம்

www.padippakam.com

சுபா : அப்போ சாமி என்ன செய்வாரு?

(கொஞ்சம் நேரம் மௌனம்)

தீபா : மானம் கிழியும்லா. அந்தால ஓட்டை விழும். அந்த ஓட்டையோட சாமி நம்ம வீட்டு முற்றத்துல பொத்துன்னு விழுவாரு.

சிரித்துக் கொண்டே இருவரும் ஓடுகிறார்கள்.

இத்தகைய உரையாடல்களை பல பெற்றோர்கள் கேட்டிருக்க முடியும். இவை குழந்தைக் கிறுக்கல்கள் அல்ல. பெரிசுகளால் நெருங்க முடியாத கிறுக்கல் ஓவியங்கள், பெரிசுகளின் மொழி தாண்டிய காவியங்கள். இந்த படைப்பாக்க உணர்வை நம் குடும்பம் வளர விடுகிறதா? நம் பள்ளிகள் வளர விடுகின்றனவா? இது நம்முன் உள்ள கேள்வி.

நான் என் மகன் பிரதீப்பிடம், பன்னிரெண்டாம் வகுப்பு படிப்பவன், கொஞ்சம் இனிப்பைக் கொடுக்கிறேன். பக்கத்திலிருந்த என் தம்பி மகன் 4 வயது சக்தி ஆனந்த் என்னிடம் கேட்கிறான் பெரிப்பா, 'நானுக்கு . . . . என்கிறான். நான் எடுத்துக்கொடுக்க கையை நீட்டினேன். உடனே அவன் 'நானே' எடுப்பேன் என்றான். இந்த மொழியாக்கங்களை தமிழ் இலக்கணம் எதில் சேர்க்கும்.

பஸ்ஸில் நீண்ட பிரயாணம் முடித்து வீட்டில் வந்து சேருகிறோம் நானும் என் மனைவியும். சக்தி ஆனந்த், உஷா பெரிம்மா, உன் கால் ஏன் வீங்கி இருக்கு? - எங்கள் மகள் தீபா சொல்கிறாள், மக்கா, ரொம்ப தூரம் பஸ்ஸில போனா பெரிம்மைக்கு கால்ல நீர் போடும். அதற்கு அவன் பஸ்ஸில் போனா 'நீருமா?' என்கிறான்.

என் தங்கை மகன் ராஜா தன் தமிழ் வீட்டுப்பாட நோட்டில் எழுதி இருப்பது இப்படி: அண்ணன்/தம்பி தகப்பன்/தகப்பி ஆசிரியர் தகப்பி என்பதை வெட்டி தாய் என்று எழுதி இருக்கிறார். இந்த மொழியாக்கப் புதுமையை பொருளற்றது என்பதா? இல்லை கவனத்தோடு உற்று நோக்குவதா?

பள்ளி ஆசிரியர் என்ற முறையில் என்னிடம் ஒரு பிரச்சினை கொண்டு வரப்பட்டது. தாய் சொல்கிறார் இவள் என் மகள், உங்கள் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் படிக்கிறாள். ரெண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இவள் அப்பா, என்னை விட்டுவிட்டு இன்னொருவளோடு ஓடிவிட்டான். ஒருவேளை குழந்தையை எடுத்துச் செல்ல உங்கள் பள்ளிக்கு இவள் அப்பா வரலாம், எனவே கவனமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்றாள். நான் குழந்தையிடம், உன்னை யார் பள்ளியில் கொண்டு விட்டார்கள் என்று கேட்டேன். உடனே அவள் 'டாடி' என்றாள். பக்கத்தில் நின்ற தாய், என் அப்பாவை அவள் டாடி என்பாள். அவள் அப்பாவை அப்பா என்பாள் என்றார். சரி, சரி என்று விட்டு, நீ வீட்டுக்கு யாருகூட போவ என்றேன். டாடி கூட என்றாள். அடுத்தநாள் காலையில் குழந்தையை

படிப்பகம்

www.padippakam.com

பள்ளியில் விட்டுவிட்டு தாத்தா சென்றுவிட்டார். கவனமாக இருக்கவேண்டும் என்ற உணர்வோடு, உன்னை யாருகூட்டிட்டு வந்தா என்று அக்குழந்தையிடம் கேட்டேன். 'டாடி' என்றாள். நீ வீட்டுக்கு யாருகூட போவ என்றேன். டாடி கூட என்றாள். கனைத்துக் கொண்டே நான் திரும்பினேன். அவள் சிரித்துக் கொண்டு, தன் நெற்றியில் வலது கையால் டப் டப் என்று தட்டிக்கொண்டு பக்கத்திலுள்ள குழந்தையிடம் சொல்கிறாள். 'இந்த சாருக்கு ஒண்ணுமே தெரியாது. நேத்தைக்குக் கேட்ட கேள்வியையே இன்னைக்கும் கேக்காரு'. என் உணர்வுகள் தாறுமாறாக பிய்த்துக் கொண்டன. நான் ஊர்ந்து, நகர்ந்து வகுப்பறையைக் கடந்தேன்.

என் மருமகன் ராஜேஷின் அண்ணன் அசோக்கின் மகன் கண்ணா. அசோக் வேலை காரணமாக குடும்பத்தோடு டெல்லி சென்றார். மூன்று வயது கண்ணாவை ஒரு பள்ளியில் சேர்த்தார். அவன் வகுப்பில் ஆங்கிலமும் பேசவில்லை, இந்தியும் பேசவில்லை. தமிழ் மட்டுமே பேசுகிறான் என்று இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஆசிரியை சொல்கிறார். இவனிடம் அன்பாக ஆங்கிலத்தில் பேசு இல்லை. இந்தியில் பேசு என்றால், அதற்கு கண்ணா சொன்ன பதில் "டீச்சரை தமிழ் பேசச் சொல்லு".

குழந்தைகளின் இந்த இயல்பான உள்ளாற்றலை நாம் புரிந்து கொண்டிருக்கிறோமா?

'குழந்தைகள் நமது ஆசான்கள்' என்று என் சக ஆசிரியை சாவித்திரி, கிருஷ்ணம்மாள் இருவரிடமும் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சின் தொடர்ச்சியில் எங்கள் மூவரிடமும் பள்ளிநேரம் கடந்த உணர்வு தொற்றியது. சாவித்திரி சொல்கிறார், சார், என் மகன் கிஷோரை நேத்தைக்கு பாடம் படிக்கலேன்னு அடிச்சேன். உடனே அவன் சொல்கிறான், அம்மா, நிறுத்துங்க, ஏன் என்னை அடிக்கிறீங்க, நீங்க என்ன தீவிரவாதியா. நான் அசந்துட்டேன் சார். உடனே, கிருஷ்ணம்மாள், சார் நேத்தைக்கு என் மகன் அஸ்வத் அவன் தாத்தாவோட ஏழு மணி வரை விளையாடிட்டே இருந்தான். டேய் அஸ்வத் பாடத்தைப் படின்னு சொன்னேன். அதுக்கு அவன் சொல்லுதான், 'சரி சரி நிறுத்து, புராணத்தைத் தொடங்காதே, நான் படிக்கேன், அப்படீன்னு. எனக்கு ஒண்ணுமே தோணலை சார்.

கிஷோர், அஸ்வத் இருவருக்கும் 5 வயது. 'தீவிரவாதி' 'புராணம்' என்ற சொற்கள் ஏதோ ஒரு அர்த்தகனத்தோடு அவர்களின் மனதில் ஏறி இருக்கிறதே. இது எப்படி, ஏன் என்று நாம் என்றாவது யோசித்திருக்கிறோமா?

என் மனைவியின் அக்காள் மகள் கவிதாவின் 3 வயது மகன் நிதீஷ். இவர்கள் ஒருமுறை பாண்டிச்சேரியிலிருந்து எங்கள் நாகர்கோவில் வீட்டிற்கு வந்து விடைபெற்றபோது, கவிதா, தாத்தாவுக்கு டாட்டா சொல்லு என்றாள். நான்

படிப்பகம்

www.padippakam.com

மக்ளே போயிட்டு வா வணக்கம் என்றேன். அவன் டாட்டா என்று சொல்லி சென்று விட்டான். இரண்டு மூன்று மாதங்கள் கழித்து மீண்டும் வீட்டுக்கு வந்தார்கள். புறப்படும்போது நிதீஷின் டாட்டாவை எதிர்நோக்கி நான் வாசலில் நின்றேன். அன்று நான் சொன்னதை மனதில் வாங்கி, தாத்தா போயிட்டு வாரேன். மணக்கம் ('வ' இன்னும் சரியாக வரவில்லை அவனுக்கு) என்றான். அவன் கைகள் கூப்பி நின்றன. வாரி அணைத்து முத்தம் கொடுத்தேன். அவன் கன்னம் குழிய சிரித்த சிரிப்பு என் மனதில் நிறைந்து நிற்கும் ஒரு பகுதி. இது ஈயடிச்சான் காப்பியல்ல. என் மகள் கவிதாவிடம், 'வணக்கம்' என்று சொல்லப் பயிற்சி கொடுத்தாயா என்று கேட்டேன். "ஆமா, எனக்கு வேற வேல இல்ல" என்றாள். அப்படி என்றால் அக்குழந்தையின் மனப் பயிற்சி/சாதுரியம் தான் என்ன?- என்றாவது நாம் யோசித்திருக்கிறோமா?

என் அண்ணன் முருகனின் மகள் தன்யா ஒன்றரை வயது இருக்கும். நல்ல துறுதுறுன்னு இருப்பா. என் அண்ணன் அற்புதமான கதை சொல்லி, அவன் வேலை நேரம் போக மீதி நேரமெல்லாம் தன்யாவிடம் மட்டுமே பேசுவான். இவர்கள் இருப்பது இரணியல். நான் இருப்பது நாகர்கோவில். ஒரு சந்தர்ப்பத்தில் பிந்து, தன்யோவோட நாங்கள் சந்தித்தோம். என் அண்ணன் தன்யாவைப் பார்த்து, என்னைக் காட்டி இது யார் என்று கேட்டான். உடனே தன்யா, மொட்டத் தாத்தா என்றாள். உடனே நான் என் அடர்த்தியான மீசையை நீவிக் கொண்டு, பட்டென்று தன்யாவின் உதட்டில் கை வைத்து உனக்கு இங்கு முடியில்லையே என்றேன். அவள் உடனே என் வழுக்கைத் தலையில் கைவைத்து, தாத்தாவுக்கு முடியே இல்லை என்றாள். நான் விட்டுக் கொடுக்காமல், என் தலையின் பின்பகுதியைக் காட்டி இங்கு முடி இருக்கே என்றேன். அதற்கு அவள், தாத்தாவுக்கு கொஞ்சம் போல முடி என்று முகத்தைச் சுருக்கி, வலதுகை ஆள்காட்டி விரலில் சிறு நுனியைக் காட்டி என்னிடம் சொன்னபோது சடைவிரி கோலமாக ஆடினேன். இந்த நுனிவிரல் காட்டல், முகத்தைச் சுருக்குதல் எப்படி குழந்தை மனதில் புகுந்து சரியான நேரத்தில் வெளிப்பட்டது. இத்தகைய கற்றல் எப்படி எங்கு நிகழ்ந்தது நாம் யோசிக்க வேண்டாமா. இத்தகைய உணர்வுகளை நீங்கள் நுகர்ந்ததுண்டா? ஒருவேளை/இல்லை கட்டாயம் நீங்கள் சந்தித்திருப்பீர்கள், ஆனால் குழந்தைகள் தானே என்று தவிர்த்திருப்பீர்கள்.

வேண்டாம், இத்தகைய பார்வை. நம் குழந்தை நமது குழந்தைகள் தாம். அவர்கள் பெரியவர்கள் அல்ல,ஆனால், குழந்தைகளின் மனஉலகு சிறியது அல்ல. சுருங்கியதும் அல்ல. குறைந்தபட்சம் நம் குழந்தைகளின் மன உலகையாவது நாம் புரிந்து கொள்ள வேண்டாமா? எப்போது பெரிசுகள் நாம் புரிந்து கொள்ளுகிறோமோ அப்போது மட்டுமே தலைமுறை இடைவெளி, கல்வி ஊடக மொழி - இன்னும் இன்னும் பற்பல பிரச்சினைகள் தீர்ந்து மெய்யான உலகு புலப்படும்.

■

படிப்பகம்

www.padippakam.com

கடிதங்கள்

● 'திண்ணை' மீண்டும் தோன்றியிருப்பது மகிழ்ச்சியான விஷயம். காலத்துக்கு ஏற்ற நோக்கங்களை விசாலப்படுத்தியிருப்பது வரவேற்கப் படவேண்டியதே. இதழின் உள்ளடக்கம் தரமாக இருக்கிறது. மீரான் மைதீன் 'மஜ்னூன்' சிறப்பான கதை. புத்தக மதிப்புரைகள் ஆழ்ந்த நோக்குடன் எழுதப்பட்டிருக்கின்றன. 'மதம் குறித்த விவாதத்திற்கான 'சில குறிப்புகள்' சிந்தனையைத் தூண்டும் என எதிர்பார்க்கலாம். திருப்பூர் கிருஷ்ணன் ஆசிரியராகப் பணிபுரியும் 'அம்பலம்' இன்டர்நெட் இதழில் 'வாரம் ஒரு சிற்றிதழ் பற்றி அறிமுகக் கட்டுரை எழுதி வருகிறேன். இவ்வாரம் 'திண்ணை' பற்றி எழுதிக்கொடுத்திருக்கிறேன்.

வல்லிக்கண்ணன், சென்னை.

● தலையங்கம் வாசல் திறக்கிறது, படித்தேன், இதர பக்கங்களிலும் தரமான சிறந்த படைப்புக்கள் இருப்பதைக் கண்டேன். இன்றைய காலகட்டத்தில் திண்ணையின் ஒவ்வொரு இதழும், தமிழகத்திற்குத் தேவை. எனவே, சிரமங்களையெல்லாம் வென்று, திண்ணையைத் தவறாது வெளியிடுக. . . கலைஇலக்கியத் துறையில் சாதனை புரிந்துள்ள ஆசிரியர் குழுத் தோழர்களுக்கு என் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள். அவர்களது படைப்பாற்றல்கள் அனைத்தும் ஒன்று திரண்டு இடைபறாது இயங்கட்டும்! கி.பி. இரண்டாயிரத்தில், பொருள்பொதிந்த புதுமைத் தமிழ் இலக்கியத்தை வளர்க்கும் பாதையில், இளையதலைமுறைக்கு ஊக்கமும், உற்சாகமும் 'திண்ணை' வழங்குமாக!

தி.க.சிவசங்கரன்., திருநெல்வேலி.

● ஹெச். ஜி. ரசூலின் " வாசல் திறக்கிறது" நேர்த்தியான பிரகடனம். மீரான்மைதீனின் மஜ்னூன் வியக்கத் தக்க நிகழ்ச்சிக் கோவையோடு வாசிப்போரை ஈர்க்கிறது. பொதுவாகக் கவிதைகளில் இன்னும் தெளிவு தேவை எனக் கருதுகிறேன்.

திண்ணைக்குத் துணை நிற்கும் அனைத்து இதயங்களையும் நான் வாழ்த்தி வணங்குகிறேன்.

பரிணாமன், சென்னை-88.

படிப்பகம்

www.padippakam.com

● சமீபத்தில் 'திணை' படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. வித்தியாசமாக உள்ளது. அதை வாசிப்பது 36 புதிய சுவாரஸ்யமான அனுபவமாக இருந்தது. குறிப்பாக, இதில் மீரான் மொய்தீன் எழுதிய 'மஜ்னூன்' சிறுகதை (சற்றே பெரிய) சிறப்பாக இருந்தது. பாராட்டுக்கள்.

அப்zல், சென்னை.

● "மஜ்னூன்" என்னை ரொம்பவும் சங்கடப்படுத்திவிட்டது. 'பயணம்' போனவர்களின் இப்படியான ஒரு அனுபவத்தை யாரும் பதிவு செய்ததாகத் தெரியவில்லை. புலியைப் பார்த்து பூனை சூடுபோட்டுக்கொண்ட மாதிரி பத்து வட்டிக்கு வாங்கியும், இருந்தது. போனதை விற்றும், சொந்த பந்தங்களை இழந்தும் என்னவொரு சோகமான வாழ்வு. மீரான்மைதீனுக்கு பாராட்டுக்கள். தொடர்ந்து இத்தகைய அனுபவத்தை அவர் எழுத வேண்டும்.

சார்லசு.குடவாசல்

● திணை பத்திரிக்கை, கைக்கு அடக்கமாகவும், அழகாகவும், அச்சுக்கலை நேர்த்தி, சிறப்பாகவும் இருக்கு. இது தொடர்ந்து வரணும்னு பிரார்த்தனை நெஞ்சில் உதிக்கிறது.

மீரான் மைதீன் 'மஜ்னூன்' கதை படித்தேன். படிக்க சுகமாக இருந்தது. நல்ல நடை அழகு மனதில் தங்கியிருக்கிற கடிதத்தைப் படித்து போன்ற அனுபவம்.

பொதுவாக சிறு பத்திரிகைகளில் இட வசதி மிகவும் குறைவு. 'திணை' ஓர் நீண்ட கதையை பிரசுரித்திருப்பது சந்தோஷமான விஷயம்.

ஸ்ரீதரகணேசன், தூத்துக்குடி.

● 'திணை' வரவு மகிழ்ச்சி தருகிறது. பல விசயங்கள், பல படைப்பாளிகள் பங்கேற்பு நல்ல வளர்ச்சிக்கு அறிகுறி. பழைய திணையின் வடிவம், அச்சமைப்பின் பிரமிப்பு இன்னும் நீங்கவில்லை. தொடர்ந்து வரணும். (உழைப்போம்.)

இரா.காமராசு, மன்னார்குடி.

படிப்பகம்

www.padippakam.com

எஸ்.பிரேம்தாஸ்

நூல் :
சாதிமதங்களைப்
பாரோம்
தொகுப்பாசிரியர்
பொன்னிலன்,
முப்பால் மணி
வெளியீடு
பேரா.நா.வா.
வெளியீட்டகம்
மணிகட்டிபொட்டல்,
குமரி.
பக் : 186
விலை : ரு 40/-

திரு. பொன்னிலன் மற்றும் திரு. முப்பால்மணி ஆகியோர்களால் தொகுக்கப்பட்டு வெளிவந்திருக்கும் 'சாதி மதங்களைப் பாரோம்' புத்தகம் இதைவிட தகுந்த நேரத்தில் வந்திருக்க முடியாது. சாதியும், மதமும் உச்சகட்ட வீச்சில் இயங்கிகொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த மாதிரி புத்தகங்கள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தும். புத்தகத்தின் முதல் இரண்டு கட்டுரைகளை சங்க இலக்கியத்தில் சாதி அமைப்பின் முலபடிவங்கள் தொ.பரமசிவம் மற்றும் வைணவம் - இராமானுசர் - சாதிகள் - எஸ். தோதாத்ரி கட்டுரைகள் மற்ற கட்டுரைகளிலிருந்து வித்தியாசப்பட்டு மூல ஆய்வுகளுக்கு அழைத்து செல்கிறது. தோதாத்ரி அவர்களின் கட்டுரை வைணவத்தை பற்றிய ஒரு பிம்பத்தை கொடுக்க முயலுகிறது. சாதி சமத்துவத்திற்கு வைணவத்தின் பங்களிப்பை கூறிகொண்டு வரும் கட்டுரை ஒரு கட்டத்தில் வைணவத்தை சமூக போராளி இயக்கமாகவே சித்தரிக்க முயலுகிறது.

தே. ஞானசேகரன் அவர்களின் ஒடுக்கப்பட்ட சாதிகள் (தென்மாவட்டச் சாதி மோதல்கள் காரணங்களும் தீர்வுகளும்) தெளிவாக சில வரலாற்று உண்மைகளை காட்டுவதோடு, தேடப்படவேண்டிய தோண்டப்படவேண்டிய வரலாற்று உண்மைகளை நோக்கி நம்மை செலுத்துகிறது. மறவர்களின் ஆதிக்கம் சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அடக்கமுடியாத இருப்பதை அழகாக சுட்டிக்காட்டியிருக்கிறது. உதாரணம் குசோ, பழனிவேலு, லிலாவதி, முருகேசன் படுகொலைகள் இக்கட்டுரையில் கொடுக்கப்பட்ட தீர்வுகளும் மேம்போக்கானதாகவே உள்ளது. மஹாத்மா பூலே கூறியதுபோல தலித்துகள் தங்களை நகர்புறவாசிகளாக்கி கொள்வதும், பொருளாதார விடுதலை பெறுவதும் இவற்றோடு கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்களாக உள்ளது. ஒடுக்கப்பட்ட சாதிகள் தலைப்பில் தேவேந்திரகுல, வேளாளர், ஆதிதிராவிடர், அருந்ததியர் என்று சக்திபெற்றுள்ள சாதிகளை மட்டும் குறிப்பிட்டு விட்டு, பல மோதல்கள், ஒடுக்குமுறைகளை சகித்துவிட்டு பதிலடி கொடுக்க இயலாததால் வெளியே வராமல் போன மற்ற ஒடுக்கப்பட்ட ஜாதிகளை பற்றிய பதிவுகள் இல்லாமல் உள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

தேவேந்திரர் வரலாறு, பண்பாடு, வாழ்வு என்ற குருசாமி சித்தர் அவர்களின் கட்டுரை தெளிவாக சில விஷயங்களை கூறுகிறது. தேவேந்திரகுல வரலாறு எவ்வாறு தமிழ்வரலாறோடு இனைந்து 2500 ஆண்டுகளுக்கு முன்னே நடைபோடுகிறது என்பதையும் தமிழகம், இமயம்வரை இருந்ததை உறுதிபடுத்தும் விதமாக மள்ளர் இந்தியா முழுவதும் சிதறிகிடப்பதையும், மள்ளர் அரசர்களான மூவேந்தர்களும், அதற்கு முன்னாலுள்ள அரசர்களும், எவ்வாறு தமிழை வளப்படுத்தினார்கள் என்ற தேவேந்திரர்களின் வரலாற்று பாத்திரம் சுருக்கமாக ஆனால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

பூங்குன்றன் அவர்களின் கட்டுரை ஒரு வரலாற்றியல் ஆய்வாகவே தரப்பட்டுள்ளது. கட்டுரை நெடுக அவருடைய உழைப்பு வெளிப்படுகிறது. குறிப்பாக வலங்கை, இடங்கை ஜாதியினரை பற்றிய தகவல்கள், கலியுகம் பற்றிய பிராமணர்களின் வருணனைகள், மேலும் கொங்கு நாட்டு கல்வெட்டுகள் கூறும் உண்மைகள், சோழன் காலத்தில் வலங்கை இடங்கை என 196 சாதிகள் கொங்கு நாட்டிலிருந்த வரலாறு, பழங்குடிகள் வரலாறு என கொங்கு நாட்டு வரலாற்று வழிகாட்டியாகவே அமைந்திருக்கிறது.

தமிழ் சிந்தனை மரவுகளும், சூபிக்களும் என்ற ஹெச்.ஜி.ரசூல் அவர்களின் கட்டுரை முக்கியமானது. ஏனென்றால் இந்த தளங்களில் இதுவரை விரிவான ஆய்வுகள் செய்யப்படவில்லை. இன்னும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஓரிறைகொள்கைகளை அழுந்தப்பிடித்து சூபிக்களின் முக்கியத்துவத்தை குறைத்தாலும் இந்திய சூழலில் சூபிக்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாது. கட்டுரை முழுக்க முழுக்க தமிழ்சூழலை பற்றி எழுதப்பட்டிருந்தாலும் இந்திய சூபி துறவிகளில் மிக முக்கியமானவர்களாக கருதப்படும், கபீர் மற்றும் அஸ்மல்பீர் பற்றிய குறிப்புகள் இருந்திருக்க வேண்டும். மேலும் சூபிதுறவி வழிபாடுகளின் மீதுள்ள எதிர்ப்புகுரல் பற்றி ஆய்வுச் செய்யப்பட்டிருந்தால் பல்தளங்களில் பிரகாசித்திருக்கும். மிகவும் ஆரோக்கியமான இந்தக் கட்டுரை பெரிதும் பேசப்படலாம்.

ப. ஆனந்தகுமார் அவர்களின் ஸ்ரீ நாராயண குருவும் சாதிகளும் கட்டுரை 'குருஜி' என்று கேரளாவிலுள்ள அனைத்து மக்களாலும் அன்போடு அழைக்கப்படும் ஸ்ரீ நாராயணகுரு பற்றி ஆழமாக அலசுகிறது. 18ம் நூற்றாண்டில் தென்கோடியில் தோன்றிய சமூகபுரட்சியாளர் வைகுண்டரும், நாராயணகுருவும் அடித்தட்டு மக்களின் வளர்ச்சியை எப்படி அடக்கிவைத்திருந்த மதம் மூலமாகவே பேசினார்கள் என்பதை சொல்லுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களின் மதமாற்றமும், மறுமதமாற்றமும் கட்டுரை தொகுப்புக்கு முத்தாய்ப்பாக அமைந்துள்ளது. Conversion என்ற சொல்லுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்திலிருந்து ஒவ்வொன்றையும் விரிவாக அலசிய ஆசிரியர், எல்லாக்கட்சிகளும் மைனாரிட்டிகளால் ஆளப்பட்டாலும் மறைமுகமாக இருந்தியக்கும் தேவரினத்தை பற்றி அழுத்தமாக பேசாதது ஒரு விடுபடுதலாகும். ஏழை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கிறிஸ்தவம் எப்படி ஒரு விடுதலை வெளிச்சமாக வந்தது என்பதையும் சரியாக சொல்லியிருக்கிறார். எப்படி இந்தியர்கள் படிப்படியாக ஆதிசமயத்திலிருந்து மதம்மாறி, பின் பௌத்தம் சமணம் என வந்து இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமில் நிலைபெற்றிருக்கிறார்கள் என்பதையும், மதம்மாற்றுகிறார்கள் என்று கிறிஸ்தவர்களை தாக்குவதைவிட ஏன் மதம்மாறுகிறார்கள் என்ற கேள்வியை உள்நோக்கியே கேட்கலாம் என்பதையும் அழகாக சொல்லியிருக்கிறார். சீக்கியத்தின் 'சிங்சபா' உதாரணம் அற்புதம்.

முனைவர் முப்பால்மணி அவர்களின் சமயச்சார்பின்மை கட்டுரை இன்னும் எளிமையாக இருந்திருக்கலாம். ஏனென்றால் இந்த மாதிரியான கட்டுரைகள் தீவிர வாசகரையும் தாண்டி வெகுஜன வட்டாரத்திற்கும் போகவேண்டிய கட்டாயமுள்ளது. அற்புதமாக கட்டியெழுப்பப்பட்ட அந்தக் கட்டுரை சமயச்சார்பின்மையை அனுஅனுவாக ஆராய்கிறது.

பொன்னீலன் அவர்களின் முன்னுரை, பிரமாண்டத்திற்கு பிரமாண்டம் சேர்த்திருக்கிறது. "வைதீகம் நேரத்திற்கு தக்கவாறு தன்வேஷங்களையும், கோஷங்களையும் மாற்றிக்கொள்வதைப் புரிந்து கொள்வது போதாது, அதற்குப் பொருத்தமான போராட்ட ஆயுதங்களையும், உத்திமுறைகளையும் உடனுக்குடன் தேர்ந்தெடுத்துத் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வார்த்தைகள் புத்தகத்தின் சாரமாக விளங்குகிறது. ■



படிப்பகம்

www.padippakam.com

செவ்வியல் சிமிழை நொறுக்கிய மொழி

நட. சிவகுமார்

நூல் :
ஒடக்கு
ஆசிரியர்
என்.டி.ராஜ்குமார்
வெளியீடு
கலை இலக்கியப் பெருமன்றம் (திருவண்ணாமலை)
பக் : 72
விலை : ரூ.20/-

தமிழ் புதுக்கவிதையின் நீண்ட பாரம்பரியத்தில் மனம்சார்ந்த காலம்-இருப்பு இவ்விரண்டையும் தாண்டி சூன்யம் பற்றிய மௌன ஓவிய சித்திரங்கள் கவிதையாகி உள்ளன. வாழ்வின் நிகழ்வுகள் மொழி ஜாடிக்குள் அடைக்கப்பட்டும் நம்பிக்கை ஊற்றாகவும் இழப்புகள் தீராத நோய் மாதிரியும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தொன்மங்கள், புராணச்செய்திகள், சின்னசின்ன நாட்டார் கூறுகள், கவிதைகளுக்குள் எடுத்துகாட்டுகள் மாதிரி வானம்பாடி தொடர்ச்சி கவிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் பன்முக, சாதிகளின் கூறுகளின் வாழ்வியல் விசயங்களை கவிதைக்குள் பேசும் நிர்பந்தம் நிகழ்ந்த போது அதுவும் தலித் கவிதை நுகர்வோனுக்கு இது எடுத்து சொல்லப்பட்டபோதுதான் ஏற்கனவே பேசிய மொழி உடைபட்டும் சமூகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளாய் புரையோடிய புற்றுநோய்க்கு லேசர்கதிர்களில் சிகிச்சைமுறையும் அந்தந்த சாதி கவிஞனுக்கு தேவைப்பட்டது. இது இரண்டுவகையில் செய்யும் நிலை வந்தது. 1. ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்குள் நடக்கும் நிகழ்கால கொடுமைகளை கவிதைக்குள் கொண்டு வருவதும் அடுத்தாக புராணசெய்திகள் தொன்மங்கள் எல்லாம் மறுவாசிப்பு செய்வதும் அத்தோடு அந்தந்த சமூகத்திற்கே உரிய மண்ணோடு மண்ணாகிப்போன கதை கூறுகளை வெளிக்கொணர்வதும் அவசியமாகிறது. இதை சொல்ல ஒரு பத்திரிகையாசிரியனும் வரலாற்று ஆராய்ச்சியாளனும் மட்டுமே போதாதா? அதற்கு ஒரு கவிதை சமைப்பவன் ஏன் அவசியம் என்று நமக்கு உறுத்தலாம். கவிஞன் இவைகளை நேர்கோட்டு பார்வைமொழியில் தருவதில்லை. அந்த புள்ளியில்தான் நான் மேற்குறிப்பிட்ட இருவரைவிடவும் அவன் வித்தியாசப்படுகிறான். அதற்காக கவிதைக்கு தனிமொழி உண்டு என அவனை செவ்வியல் சிமிழுக்குள் தள்ளிவிடவும் முடியாது.

'மாங்காய்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்கு தேங்காய் பால் ஏதுக்கடி குதம்பாய்' என்ற சித்தன் மொழிக்கும் 'சித்த நிருவிகற்பம் சேர்ந்தார் உடல் தீபம் வைத்த கற்பூரம் போல் வயங்கும் பராபரமே' என்ற சித்தன்மொழிக்கும்

படிப்பகம்

www.padippakam.com

வித்தியாசமிருக்கிறது. முதல்மொழிக்குள் உணவுத்தொடர்புடைய பொருள் அதாவது காணகிடைப்பதை குறியீட்டு மொழியில் பேசுகிறது. இரண்டாவது பாட்டு கருத்துமொழியை கவிதைக்குள் அண்டவெளிக்குள் குறியீட்டு தளத்தில் பேசவைக்கிறது.

இந்த வாசிப்போடு நான் என்.டி.ராஜ்குமாரின் ஒடக்குக் கவிதை தொகுப்பில் நுழையும் போது எனக்குக் கிடைக்கும் உணர்வு முதலில் இது பிரகடனப் படுத்தப்பட்ட தலித்கவிதை தொகுப்பு. அனாதைபயலாகிப் போனதால் வஞ்சனையில் மாட்டி செத்த அவனை எனக்கு ரொம்ப பிடிக்கும் சூரியன் எப்படி ஒருத்திக்கு கணவனாக முடியும் எந்தத் தெம்மாடி ஏமாற்றிச் சென்றானோ குந்திதேவியை. இது ஏற்கெனவே உருவாக்கி வைத்திருக்கும் ஒருபுராண புனைவு கதையை கரிசனையுடன் கேள்வி கேட்பது. இன்னொன்று வலக்கை உண்பதற்கு குண்டிகழுவ இடக்கை இயல்பென்றும் நிறுவப்பட்ட பெருங்கதையாடல்களை சுற்றி நிறைய கட்டமைக்கும் அதிகாரத்தை உடைத்துப்பார்த்தால் உமையவளுக்கு புரியும் ஈசனுக்கு இடப்பக்கமிருப்பது இதுவும் புராணபுனைவை கேள்விகேட்பது இந்த இரண்டு கவிதைகள் மீது எனக்கு அவ்வளவாக உடன்பாடில்லை. ஒரு புராணப் புனைவை எப்படி நேரடியாக மட்டுமா? கேள்வி கேட்கபடவேண்டும் என்ற பார்வை இருக்கிறது. சிவன் நெற்றிக்கண்ணால் காமனை எரித்தான் என்று பார்த்தால் சிவனுக்கு மூன்றாவது கண் உண்டு என்றும் பொருள்படுத்தலாம். சிவன் நெற்றி என்ற அறிவால் காமனை அழித்தான் என்றும் பொருள்படுத்தலாம்.

தலித்கவிதை முளைவிட்டுத் தொடங்கிய பிற்பாடு அந்த சமூகத்தின் வாழ்வியல் ஒவியங்கள் அதாவது பறையர் சமூகப்பிரச்சனைகள் வண்ணான் சமூக பிரச்சனைகள் இப்படி பதிவுகளாகி உள்ளன. இதில் ராஜ்குமார் காணிக்காரர்களின் வாழ்வியல் நெருக்கடிகளை நம் கண்முன் காட்டுகின்றான். கஞ்சு வெள்ளமும், துண்டுகருப்பட்டியும் குடித்த வாழ்வு, காணிக்காரன் காசு கண்டவனுக்கு என்கிற அவலம் பல திருமேனிகளின் நாற்றமடிக்கும் கதைகளை நாசூக்காக சொல்லுதல் குடித்துவிட்டு காக்கைக்கூட சாப்பிடும் வாழ்வு, கண்டார ஒளி கொப்பனுக்க பணத்திலையா குடிச்சிட்டு வாரேன் என சிநேகமாய் சண்டையிடும் கணவன் மனைவி உறவு தேங்காய் தண்ணியை கொண்டுவந்து இதை ஊற்றி இந்த பச்சமுட்டை இரண்டையும் குடி என்று சொல்லும் தாய்மகன் பாசம் பாட்டி - மின்மினிப்பூச்சி உரையாடல் இப்படி காணிக்காரனின் குடும்ப எல்லைக்குள் அவனின் வாசனையுடன் நுகர முடிகிறது.

காலையில் எனக்கு கொண்டு வைக்கும் பழஞ்சியை சளுவாய் வடிய கைச்சூப்பி கொண்டிருக்கும் பிள்ளை ஓடியே வந்திருந்து கையிட்டு அலம்ப வடியும் மூக்களைய ஒரு கைக்கொண்டு எடுத்து சீந்தி மறுகை கொண்டு அள்ளிகொடுக்க

படிப்பகம்

www.padippakam.com

கால்நீட்டி இன்னொரு குழந்தையை பேளவைத்துக் கொண்டிருக்கும் பாட்டி ஏசியே ஏசியென ரசித்துக்கொண்டிருப்பாள். ஒரு நல்ல தலித்கவிதையாக இது எனக்கு தெரிகிறது. அக்கவிதை எழுந்த சூழலில் இருந்து பார்க்கும் போது.

காணிக்காரனுக்கும் மாந்தீரிகத்திற்கு தொடர்புண்டா? வைத்தியத்திற்கு தொடர்புண்டா? உண்டு ஏனெனில் இந்த கலைகள் மண்ணின் அடித்தள ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருந்தன. மாந்தீரிக பதிவுகள் பல கவிதைகளில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட மக்கள்மொழியில் அதே மாந்தீரிக இசைமொழியில் வந்து விழுகிறது. உன்னாண அடங்கு என்னாண அடக்ங் உன்னையும் என்னையும் படைச்சவனாண அடங்கு இன்னொரு கவிதையில் மந்திரத்தாலே தகடெழுதி கட்டி மருந்தெண்ணை தலையில் தப்பளம் வைத்து பதினொருநாள் குளிக்க சொல்லி பிடித்திருந்த பிசாசை கூட்டிப்போவோம் வீட்டுக்கு. இன்னொரு கவிதையில் கொத்தும் குலவையுமாயிருந்த கொமர இன்னாளை பிடித்திருக்கும் துஷ்டப்பேயே என ஏற்கெனவே பயன்படுத்தபட்டிருந்த மக்கள்மொழியை தமிழ்கவிதைக்கு இன்னொரு வரவாக கொண்டு வந்ததற்காக ராஜ்குமாரை பாராட்டலாம்.

காஞ்சிரங்கட்டை, சந்தனக்கட்டை, பொட்டுப்பொடிமருந்து உக்கிலுகூடு, கரக்கக் கூடு, கருடக்கூட்டு, பருந்துக்கூடு, கருங்கோழி, காட்டுப்பூ இப்படி ஏற்கனவே காலியாக தமிழ்கவிதைக்குள் சின்னசின்ன காலடித்தடம் பதித்தமைக்காக இன்னொரு முறை ராஜ்குமாரை பாராட்டலாம்.

ஐயோ/அது மாத்திரமா கண்ணாஊ அம்பி நம்மனையும்/ அடுத்தோட்டுவொள்ள நாடக்கம்மாரையும் பொலையம்மாரையும் ஒக்க இவம்மாரு படுத்தியபாடு/பின்ன ஒரு காரியம் பிள்ளே / இந்த அதிகாரமும் பணமும் பரிஷ்காரமும் நெலமும் சொத்துமொக்க இவர்க்கு எப்படி கிட்டிமண்ணு ஒள்ள சத்தியமறியாமே? ஆ தோண்டியெடுத்தெங்கி நாற்றமடிக்கும். இந்த கவிதை இப்படி முடிகிறது இந்த மலைமொழிக்குள் தென்திருவிதாங்கூர் சமூகப் பிண்ணணி சித்திரம் தெரிகிறது.

இப்படிஒரு கவிதை முடிகிறது. ஆடுகிறசாமியை இடுப்பினைப் பிடித்திழுத்து என் பிள்ளைகளுக்கும் எனக்குமொரு நல்லகெதியை சொல்லிப்போ இல்லேண்ணா ஒனக்கு இனிமே சோறுதண்ணி பூச ஒண்ணும் கெடையாது உள்ள போட்டு கோவில் நடைய இழுத்தடைச்சு போடுவேன் என்று அதிகாரத்தோடு சொல்ல என்றம்பு உனக்கு நானுண்டு எனச்சொல்லி திருநீர் இட்டுக் கொடுப்பான். சுடலை எனது பாட்டிக்கு இப்படியாகத்தான் எங்கள் காட்டு தெய்வங்களோடு சண்டை போட்டுகொள்வோம் என்கிற கவிதை ஏற்கனவே பேசிவந்த பக்தி இலக்கியத்தை தாண்டி நிற்கும் மாற்றாகவும் எனக்குப்படுகிறது. பேய்யை தன் கட்டுப்பாட்டுக்குள்

படிப்பகம்

www.padippakam.com

அடைத்து வைத்திருக்கும் மந்திரவாதியாகவும் சிலகவிதைகள் தெறிக்கின்றன. சுயம்சார்ந்த கவிதை விரக்தியுடனும் மனப்புழுகி கதைவெளிப்படும் வகையில் சிறப்பான விதத்தில் அமைந்துள்ளது. ஆனால் இந்தத் தொகுப்பை விட்டு அன்னியப்பட்டு விட்டது மாதிரிதான் தோணுகிறது.

இனி ராஜ்குமாரின் கவிதை மொழியை நாம் பார்த்தோமானால் மரபுத்தன்மை போல் நீண்ட வார்த்தைகள் வாக்கியமாக வந்துவிழுகிறது. மொழிக்கு அதாவது வார்த்தைகளுக்கு ஓர் ஓசை இருக்கிறது. வார்த்தைகள் இணையும்போது அது ஓசைகளின் கூட்டிசையாகிறது. அப்படிபார்க்கும் போது தமிழில் வரும் ஒவ்வொரு கவிதைகளை பருகும்போதும் அதற்குள் ஓசை இருக்கிறது. பாரதி இசைதன்மையிலும் கவிதை செய்திருக்கின்றான். மற்றபடியும் ஒரு துள்ளல் ஆட்டமும் அவன் கவிதைகளில் காணப்படும்.

மொத்தத்தில் ஓடக்குதொகுப்பு தொன்மகுறிப்பு, மாந்தீரிகம் வைத்தியம் பற்றி சிக்குண்டுசிதறிபோன சமூகச் செய்திகளை புதிய பாடுப்பொருளில் வித்தியாசப்படுத்தி தந்திருக்கிறது. தமிழில் மலிந்துவரும் பிணக்குவியல் கவிதைதொகுப்புகளுக்கு இடையே ராஜ்குமாரின் தொகுப்பு உயிர்உடன் இயங்குவதால் இந்தத் தொகுப்பு எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது.

ஆனால் ராஜ்குமார் மெத்தனத்துடன் இருக்ககூடாது. செய்ய வேண்டியவை நிறைய நிறைய இருக்கிறது. இரட்டைவால் பல்லி, குழியானை, ஈபுலி, காமரூபி, மண்ணுளிமுதலை கருத்தசுந்தரி ஐங்கோலம் இப்படி பல மாந்தீரிக உபகரணங்களில் கவிதை செயல்களம் அமைய முயற்சிக்க வேண்டும். அப்படிஅமையுமானால் இன்னும் மாந்தீரிக சூழல் ஆழம் அதிகபடும்.

கருப்பூனை கண்ணும்பித்தும் கருங்குரங்கின்பித்தும் கண்ணும்
பச்சோந்திபித்தும் வால்நீட்ட கருங்குருவிபித்தும்
வளமான பச்சைபாம்பு அரணைபித்தும் பாடுகிறேன் பாம்புபித்து
கருத்திகொண்டு பண்பானபுனுகுசவ்வாது சேர்த்து குலையானை
தந்த சிமிழில் வைத்து வைத்தப்பா தாமிரகட்டில்தானும். . .

என நீளும் மாந்தீரிக இசைமொழி கூறுகளையும் பேசும் கட்டாயம் ராஜ்குமாருக்கு உள்ளது. அத்தோடு நிகழ்கால தலித் கொடுமைகளை இத்தொகுப்பில் பதிவு செய்யாமல் ஒருபிரகடனபடுத்தப்பட்ட தலித் கவிஞன் விட்டது பெரும் குறையாகவே எனக்குபடுகிறது இனி ராஜ்குமாரின் கவிதைகளை செவ்வியல் மொழிபடைப்பு என்று யாராவது சொன்னால் அவனுக்கு மொழிபற்றி அவ்வளவாக தெரியாது என்று கூட கூறலாம். ■

படிப்பகம்

www.padippakam.com

எதிர்க்காற்று

-வி.சிவராமன்



சீக்கிய சிந்தனையில்
இறைவன், மனிதன்,
உலகம்
பதிப்பாசிரியர்.
ந. முத்துமோகன்
குருநானக் ஆய்வக
மாணவர் வெளியீடு
ம.கா.பல்கலைக்கழகம்
விலை : ரூ.50/-

ஆதிக்கப் பண்பாட்டிற்கெதிராக, சதாகாலமும் அதனை எதிர்த்துப் போரிடுகின்ற எதிர்ப்பண்பாட்டுக் கூறுகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. நிறுவனமயமாகிவிட்ட பண்பாட்டு அமைப்புகளுக்குள்ளும், சிறிய அளவிலான குழுக்களினுள்ளும் இப்போக்குகள் இருந்துவருவதைக் காணமுடியும். வளர்முகமான வீரியமிக்க எதிர்ப்பண்பாடு, ஆதிக்கப் பண்பாட்டுக் கூறுகளை ஆழ்ந்து விமர்சிப்பதோடு அதற்கு மாற்றாக மாற்றுப்பண்பாட்டுக் கூறுகளை முன்வைத்து வளர்கிறது. அந்த வகையில் நிறுவனமயமான வைதீக இந்து சமயத்தின் பேரால் கட்டமைக்கப்பட்ட ஆதிக்கப் பண்பாட்டிற்கெதிராக கலகக் குரல் கொடுத்ததோடு ஒரு மாற்றுக் கலாச்சார மரபினையும் உருவாக்கியது பௌத்தமும் ஜைனமும்.

வைதீகப் பண்பாட்டின் இருத்தலை மிகப்பெரிய சிதைவுகளுக்குள்ளாக்கியது பௌத்தக் கொள்கைகள். நாளடைவில் பௌத்தத்தின் அடிப்படையாகத் திகழ்ந்த சமூகவளர்ச்சி சார்ந்த கொள்கைகளை வைதீக இந்துமதம் சுவீகரித்துக் கொண்டதனால் பௌத்தத்தின் இருப்பே கேள்விக்குரியாகி நீர்த்துப்போனது. புத்தரையும் இந்துக் கடவுளர்களின் அவதாரமாகக் கட்டமைப்பது வரை சமஸ்கிருத மயமாதல் தொடர்ந்தது. அத்துடன் பௌத்தத்திற்குள்ளேயும் வைதீய பண்பாட்டுக் கூறுகளை செலுத்தியதன் மூலம் பௌத்தத்தை மிகப் பெரிய சிதைவுகளுக்குள்ளாக்கியது.

பௌத்தச் சிந்தனைகளோடு ஒத்துப்போகின்ற மரபார்ந்த இந்திய, இந்து, வைதீக மரபுகளிலிருந்து பெரிதும் வேறுவிதமான போக்கினைக் கொண்டிருப்பது சீக்கியச் சிந்தனை. சீக்கியச் சிந்தனை வைதீகச் சிந்தனைக்கு எதிர்த்திசையில் தனது பயணத்தை மேற்கொள்கிறது. சீக்கிய சிந்தனையில் இறைவன், மனிதன், உலகம் என்ற இந்த கட்டுரைத் தொகுப்பு நூல், சீக்கியம் இறைவன், மனிதன் உலகம் குறித்துக் கொண்டிருக்கும் சிந்தனைப் பதிவுகளை விளக்கமாக நமக்கு அளிக்கிறது.

இந்நூலின் தொகுப்பாசிரியர் முனைவர் ந.முத்துமோகன். அவர் தனது முன்னுரையிலும், சீக்கிய சமயத் தத்துவம் என்ற முதல் கட்டுரையிலும் சீக்கியத்தின் அடிப்படைத் தத்துவ மூலங்களை வரையறுத்துக் காட்டுகிறார்.

படிப்பகம்

www.padippakam.com

பௌத்தம், ஜைனம் அதற்குப்பின் தாந்திரீகம், சாக்த மரபுகளுக்குப்பின் இஸ்லாம் என்ற பல்வகைப்பட்ட கலாசார, சமயப் பின்புலத்தினைக் கொண்டிருந்த பஞ்சாப் மண்ணில் கி.பி.15-16ம் நூற்றாண்டுகளில் சீக்கியம் தோன்றியது. வைதீகத்தின் பண்பாட்டு ஒதுக்கல் கொள்கையும், தொடர்ச்சியான அன்னியப் படையெடுப்புகளும், வளமான நிலப்பகுதியும் சீக்கியம் ஒரு தனித்த சிந்தனை போக்காக உருவெடுக்கக் காரணமாக இருந்ததை இக்கட்டுரை விளக்குகிறது.

பஞ்சாபின் விவசாய வாழ்க்கை பின்னணி சீக்கியத்திற்கு ஓர் வலுவான உலகியல் தளத்தை அளித்தது. வைதீகமதம் நிலையாமை உலகைக்கடந்த பேருண்மைபற்றியெல்லாம் பீத்திக்கொண்டிருந்தபோது சீக்கியம் அடிப்படையில் செயல்பாட்டுப் பண்பினைக் கொண்டிருந்ததெனவும் முத்துமோகனின் கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

இந்திய தத்துவ வரலாற்றுச் சூழலில் சீக்கியத்தின் இடம் குறித்தும் விளக்கப்படுகிறது. வைதீக இயக்கமறுப்பியல், கருத்துமுதல் வாதத்திலிருந்து சீக்கியம் அடிப்படையிலேயே வேறுபட்டு உலகையும், உலகியல் முரண்பாடுகளையும், மாற்றங்களையும் மாற்றங்களை நோக்கிய சமூகச் செயல்பாடுகளையும் அது தன்னகத்தே உள்ளடக்கியிருப்பதையும் கட்டுரைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்நூலின் வாயிலாக சீக்கியத்தின் சிறப்பியல்புகளாகச் சிலவற்றைத் தொகுத்துக்கொள்ளலாம்.

1. இறைவனும் உலகமும் ஒன்றினை ஒன்று சார்ந்த, புற உலகிற்கு அப்பாற்படாத, நிகழ்கால எதார்த்தங்களுக்கு வழியமைக்கக் கூடிய உறவுப்பாலம் என்ற சிந்தனையை வலுப்படுத்தியது.

2. சடங்குகள் குவிந்த பழைய மரபிற்கு எதிர்நிலையில், பண்பட்ட, பக்குவப்பட்ட மனிதர்களை உருவாக்குகிற நிலையில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டது.

3. அனைத்து சாதியினரையும் தங்களது சாதீய, முந்தைய மத அடையாளங்களை விட்டொழித்து விடுவதற்காக சாதி எதிர்ப்பினை முன் வைத்து தொடங்கப்பட்ட கால்சா அமைப்பு, குன்றிப்போன மனிதாபிமான உணர்வை மீட்டுருவாக்கம் செய்யவும், சாதிமதபேதங்களை அகற்றவும் உருவாக்கப்பட்ட லங்கர் எனப்படும் பொது உணவுச் சாலை அமைப்பு, அறிவு சார்ந்த வாழ்வையும், உடல் உழைப்பு சார்ந்த வாழ்வையும் தனித்தனியாகப் பிரித்து வைத்திருந்த வைதீக

படிப்பகம்

www.padippakam.com

சமயத்திற்கெதிராக ஞானும், உடல் வலிமையும் ஒன்றாகப் பெற்ற முழுமனிதனை உருவாக்கவும் அடித்தள மக்களுக்கு ஆயுதமேந்தும் உரிமையை அளிக்கவும் அமைக்கப்பட்ட சந்த்-சிபாயி ஆகியவை பிராமணியம் குவித்து வைத்திருந்த சாதி சமயகலாச்சாரங்களை எதிர்த்த ஒரு சுயமரியாதைப் புரட்சியை சீக்கியம் உருவாக்கியதற்கான அடையாளங்கள்.

4. துறவறத்தை ஏற்றுக்கொள்ளாத சீக்கியம், துறவிக்குப் பதிலாக இல்லறத்தான் என்ற முன்மாதிரியை ஏற்றுக் கொள்கிறது.

5. உலக வாழ்வியலுக்கு அப்பாலான விதேக முக்தியையும், தனிமனித விடுதலையினை மய்யப்படுத்துகின்ற ஜீவன் முக்தியையும் நிராகரித்துவிட்டு ஒட்டுமொத்த சமூகத்தின் விடுதலையினை முன்னிறுத்தும் சர்வ முக்தி என்ற விடுதலைக் கோட்பாட்டினை சீக்கியம் உருவாக்கிக் கொண்டுள்ளது.

முத்துமோகனின் தத்துவச் சொல்லாடல்களுக்கு மிகச்சிறந்த விளக்கங்கள் அளிப்பதாக அமைந்திருக்கிறது தொகுப்பின் பிற கட்டுரைகள். குருபிரந்தத்திலிருந்தும், சீக்கிய குருக்களின் வாழ்விலிருந்தும் பல்வேறு எடுத்துக்காட்டுகளையும் தொகுத்து இறைவன், மனிதன், உலகம் குறித்து தனித்தனிக் கட்டுரைகளில் விளக்கியிருக்கிறார்கள் சீக்கியத்தைப் பயிலும் மாணவர் குழுவினர்.

ஒரு அறிமுக நூல் என்று இத்தொகுப்பினை எடுத்துக் கொண்டோமானால், மரபு சார்ந்த வைதீக, அவைதீகப் போக்குகளைச் சாராமல் தனித்த ஒரு இயங்குதளத்தைக் கொண்டு விளங்கும் சீக்கியம் குறித்து இதுவரை நமக்குச் சொல்லப்படாத பேருண்மைகளை இந்நூல் நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. சமயம் குறித்தான புதிய புரிதல்களுக்கு இக்கட்டுரைகள் இட்டுச் செல்லுகின்றன. மாற்றுப்பண்பாடு குறித்தும், அடித்தள மக்களின் பண்பாடுகள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளுகின்ற பண்பாட்டாய்வாளர்களுக்கு இந்நூல் அவர்களது வழித்தடத்தை இன்னமும் செழுமையாக்குமென்றும் கருதலாம். வைதீக பண்பாட்டிற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த பல்வேறு சிந்தனைப் போக்குகள் முனை மழுங்கடிக்கப்பட்டுக் கிடக்கும் இன்றையச் சூழலில் வைதீகம் ஒதுக்கிவைத்த ஒரு சிந்தனை மரபு எப்படி இன்றளவிலும் வைதீக இந்துப்பண்பாட்டின் ஆக்கிரமிப்புக்கு அகப்படாது உயிர்ப்புமிக்க பண்பாட்டு மரபாகத் திகழ்கிறது என்ற சீக்கியச் சிந்தனையின் மீதான ஆய்வு பிற பண்பாட்டு ஆய்வுகளையும் வளப்படுத்தும். அந்தவகையில் சீக்கியத்தின் உயிர்ப்பு குறித்தும், இந்தியப் பன்மியத்தின் பிற கலாச்சார கூறுகள் குறித்தும் புதிய ஆய்வுகளை மேற்கொள்ள இந்த நூல் சுடரேற்றியிருக்கிறது. ■

படிப்பகம்

www.padippakam.com

மகான் அய்யங்காளி

-பொன்னீலன்

பழங்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியான சேர நாடே இன்றை கேரளம். சங்க இலக்கியங்கள் என்று சொல்லப்படும் அற்புதமான இலக்கியங்களில் பல அப்பகுதியில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களால் இயற்றப்பட்டவையே. அந்தப் பண்டைக்காலத்தில் கேரளத்திலும் பண்டைத் தமிழகத்தைப் போல ஜாதி ஏற்றத் தாழ்வுகளோ தீண்டாமையோ பெரிய அளவில் இருந்ததில்லை என்பது வரலாற்று ஆசிரியர்களின் கணிப்பு.

ஆனால் இடைக்காலத்தில் தெற்கே பரவிய வைதீக சமயம் கேரளத்தை முழுவதுமாக ஆக்கிரமித்து கொண்டது. புராண மரபின்படி பரசுராமர் படையெடுப்போடு இது நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. பண்டைய சேர ஆட்சியாளர்களையும், அன்றைய சுதந்திரமான பூர்விகக் குடிகளையும் வென்று அடிமைப்படுத்தி, பிராமணர்களில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட நம்பூதிரிகளின் ஜென்ம பூமியாக அப்போது கேரளம் மாற்றப்பட்டது. இந்த ஆட்சிமாற்றத்தின் விளைவாக தமிழும், வடமொழியும் கலந்த மலையாள மொழியும் உருவாக்கப்பட்டது.

நம்பூதிரிகளின் ஆட்சிகாலத்தில் தங்களுக்கு உதவியாக அவர்கள் உருவாக்கி வளர்த்த புதிய ஜாதியே நாயர். வேளாளர்களின் கம்மாளர்கள், செட்டியார்கள் இப்படிச் சிலர் போகப் பெரும்பான்மையான பூர்விக ஜாதிகள் எல்லாமே அப்போது உழைக்கும் ஜாதிகளாக ஒடுக்கப்பட்டன. தீண்டத்தகாதவராக ஒதுக்கப்பட்டன. மனிதர்களாக வாழும் எந்த உரிமையும் இவர்களுக்கு இல்லை. மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்பட்டனர். அடித்தளங்களில் அகப்பட்டவர்கள் மிருகங்களைப் போல் சந்தைகளில் விற்கவும் பட்டனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட ஜாதிக் கோபுரத்தின் உச்சியில் நம்பூதிரிப் பிராமணர்களும், அடித்தளத்தில் புலையர்கள், பறையர்கள், பள்ளர்கள், போன்ற பூர்விக விவசாயப் பெருங்குடி மக்களும் இருந்தார்கள். இதுவே இந்து தர்ம அடிப்படையிலான சமூக அடுக்குமுறை என்று அன்று கருதப்பட்டது.

இந்தக் கோபுர அடுக்கில் உள்ள ஜாதிகளில் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு குறிப்பிட்ட சமூகத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தத் தகுதி அடிப்படையில், தமக்கு மேலே உள்ள ஜாதிகளுக்கு வெட்கம் இல்லாமல்

படிப்பகம்

www.padippakam.com

அடங்கிப் போகவும், கீழே உள்ள ஜாதிகளை மனசாட்சியின் எந்த முணுமுணுப்பும் இல்லாமல் ஒடுக்கிக் கொடுமைப்படுத்தவும் அவர்கள் இயல்பாகப் பழக்கப்பட்டுவிட்டனர். மனிதத் தன்மையற்ற இந்த அடுக்கு முறை யாரையும் உறுத்த வில்லை. மாறாக ஏதாவது ஒரு இனம் அல்லது இனத்தின் நபர் தனக்கு விதிக்கப்பட்ட ஜாதித் தகுதியை ஏதாவது ஒரு வகையில் மீற முயலும்போது அது சமூகம் மொத்தத்தின் மனசாட்சியை உலுக்கி, மேலிருப்பவர்களின் பகையை மட்டுமல்ல, கீழிருப்பவர்களின் பொறாமையையும் தூண்டிவிட்டது.

இந்துமதக் கோட்பாட்டின்படி இந்துக்கள் பிறக்கிறார்கள். உருவாக்கப்படுவதில்லை. பிரம்மனின் முகத்தில் பிறந்தவர்கள் பிராமணர்கள். தோளில் பிறந்தவர்கள் சத்திரியர்கள், இடுப்பில் பிறந்தவர்கள் வைசியர்கள். பாதங்களில் பிறந்தவர்கள் சூத்திரர்கள். ஜாதி இல்லாதவர்கள் அல்லது பஞ்சமர்கள் என்பவர்கள் பிரம்மனிலிருந்தே பிறக்காதவர்கள். ஆகவே இவர்கள் மனிதர்களே இல்லை.

இப்படிப் பிறவி அடிப்படையில் ஏற்படும் வகுப்புகளே வருணங்கள் என்கிறது இந்து தர்மம். அதன்படி வருணப்பிரிவினை என்பது நிரந்தரமானது. ஒரு வருணத்தில் பிறந்தவன் என்னதான் தன்னைத் திருத்திக் கொண்டாலும், அவன் வேறொரு வருணத் தவனாக ஆகிவிட முடியாது என்பத இந்து தர்மத்தின் மாற்ற இயலாத அடிப்படை. இன்றைய சாதி பூசல்களுக்கும், மத மாற்றங்களுக்கும் இதுவே முதன்மையான காரணம்.

இப்படியான ஐந்து பிரிவுகளில் கேரளத்தைப் பொறுத்தவரையில் சத்திரியர்கள் இல்லை. வைசியர்கள் அல்லது வியாபாரிகள் பெரும்பாலும் தமிழ்நாட்டிலிருந்து போனவர்கள். அல்லது அரேபியாவிலிருந்து வந்த இஸ்லாமியர்கள், நாயர்கள், சூத்திரர்கள், மற்றவர்கள் அனைவரும் ஜாதி இல்லாதவர்கள், பஞ்சமர்கள், அல்லது தீண்டத்தகாதவர்கள்.

இந்தத் தீண்டத் தகாதவர்களிலும், மேலும் கீழுமாகப் பலபடி நிலைகள் இருந்தன. கிட்டத்தட்டக் கடைசிப்படியில் மாட்டிக் கொண்டவர்கள் புலையர்கள். புலையர் என்பதற்குத் திட்டுப்பட்டவர் என்பது பொருள் என்கிறது திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் (நாகம் அய்யா). புகழ் பெற்ற சமூக ஆய்வாளர் எட்கார் தர்ஸ்டனும் இதே கருத்தைச் சொல்லுகிறார். புலையர்கள் செறுமர் என்றும் அழைக்கப்பட்டனர் இவர்களில் சில பிரிவுகள் இருந்ததாகத் திருவாங்கூர் ஸ்டேட் மானுவலில் இருந்து அறிய முடிகிறது.

19-ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் புலையர்களின் சமூக நிலையை எட்கார் தர்ஸ்டன் தன் 'தென் இந்திய ஜாதிகளும் இனக்குழுக்களும்' என்னும் நூலில்

படிப்பகம்

www.padippakam.com

கீழ்க்கண்ட வாறு விவரிக்கிறார். "இந்த பரிதாபத்துக்குரிய மக்களின் சமுக நிலை மிக மிக மோசம். மேல் ஜாதிகாரர்களிடம் இவர்கள் நெருங்கி வந்தால் தீட்டுப்பட்டுவிடும். ஆகவே இவர்கள் பிராமணர்களிடமிருந்து 90 அடியும், நாயர்களிடமிருந்து 64அடியும், மற்ற ஜாதிகளிடமிருந்து 30 அடியும் விலகி நிற்க வேண்டும். அவர்கள் நடந்து போகும் போது தீட்டுப்பட்டுவிடாமல் பிற மேல்ஜாதிக்காரர்களை எச்சரிப்பதற்காக ஓகோ. ஓ. . .என்று கத்திக் கொண்டு போகவேண்டும். மேல் ஜாதிக்காரர்கள் பயன்படுத்தும் தெருக்களையும், சாலைகளையும், கிணறுகளையும், சந்தைகளையும் இவர்கள் பயன்படுத்தக் கூடாது. எதிர்பாராமல் இவர்கள் மேல்ஜாதிக்காரர்களை நெருங்கி விட்டால் அவர்கள் இவர்களைக் கொன்று விடகூடச் செய்வார்கள்.

அன்று புலயர்கள் நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாக வாழ்ந்தார்கள். உழுது விதைப்பதிலிருந்து அறுத்து, அடித்து, தானியத்தை எஜமான் வீடு சேர்ப்பது வரை எல்லா வேலைகளையும் இவர்களே செய்தார்கள். இவர்கள் தங்கள் குடிசைகளை வயல் வரப்புகளிலும் குளக்கரைகளிலும், பள்ளங்களிலும் கட்டிக் கொண்டார்கள். அன்றாடம் மாலையில் எஜமானர் கொடுக்கும் தானியத்தைக் கஞ்சியாக்கிக் காலம் கழித்தார்கள்.

மத்தியான கஞ்சி இவர்களுக்கு நில எஜமானர்களின் வீட்டுப்பெண்களே கொடுப்பார்கள். உழைத்துக் களைத்துப் போன புலையர்கள், நிலத்தில் ஒரு குழி தோண்டி அதில் இலையை வைக்க வேண்டும். பின் அவர்கள் மரபுப் படி விலகி நிற்க வேண்டிய தொலைவுக்குச் சென்று விட வேண்டும். எஜமானியம்மாள் வந்து அந்தக் குழியில் இலை மேலே கஞ்சி ஊற்றி விட்டுப் போவாள். அவள் வெகுதூரம் போனப்பிறகுதான் வேலையாட்கள் கஞ்சியின் அருகே வர முடியும். அதற்குள் பாதிக்கஞ்சியையும், சோற்றையையும் காக்கைகள் சாப்பிட்டுவிடும். வேலையாட்கள் காக்கைகளைத் துரத்திவிட்டு தின்னுவார்கள்.

புதுத்துணியைக் கூட இவர்கள் சேற்றில் புரட்டி அழுக்காக்கித்தான் கட்டிக் கொள்ள வேண்டும்.

ஆனால் இந்த மக்களின் பூர்வீகம் என்ன? இவர்கள் பழங்காலத்தில் இந்த நாட்டின் பல பகுதிகளை ஆண்ட மன்னர்களின் சந்ததிகள் என்கிறது. திருவாங்கூர் ஸ்டேட் மானுவல் (நாகம் அய்யா) எட்கார் தர்ஸ்டனும் இதே கருத்தை வலியுறுத்துகிறார்.

திருவனந்தபுரம் அருகே உள்ள வெள்ளி ஏரியில் புலயனார் கோட்டை என்ற ஒரு கோட்டை இன்றும் இருக்கிறது. இந்தக் கோட்டையிலிருந்து ஒரு புலைய அரசன் ஆண்டு வந்ததாக அறிய முடிகிறது. வடதிருவிதாங்கூரில் புலய

படிப்பகம்

www.padippakam.com

அரசர்களின் வாரிசுகள் இன்றும் செல்வாக்கோடு வாழ்ந்து வருகிறார்கள்.

இப்படித் தேடும்போது இன்றைய ஒடுக்கப்பட்ட சாதிகள் எல்லாமே ஒரு காலத்தில் இந்த மண்ணைப்பெரிய அளவிலோ சிறிய அளவிலோ ஆட்சி செய்திருக்க வேண்டும். என்றும், இன்றைய ஆட்சியாளர்களும் ஆதிக்கவாதிகளும் வெளியிலிருந்து நுழைந்து இந்தப் பூர்வீகக் குடிகளை அடிமைப்படுத்தி, ஆட்சிகளைக் கைப்பற்றி, அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள் என்றும் யூகிக்க அதிக இடம் இருக்கிறது. ஆப்பிரிக்கா, லத்தீன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் இதுதான் கதை. (பூர்வீகக் குடிகள் அங்கும் அடிமைகள். ஆக்கிரமிப்பாளர்கள் மேல் சாதியினர். கலப்பினங்கள் இடைச்சாதிகள்.) சுடலை மாடசாமி கதையில் வரும் பெரும்புலையன் கூட இப்படிப்பட்ட ஒரு ஆட்சியாளனாக இருந்திருக்கக்கூடும். ஒடுக்கப்பட்ட மக்களே தங்கள் வரலாறுகளை எழுதத் தொடங்கும்போது, இந்த உண்மைகள் படிப்படியாக வெளியே வரும்.

திருவனந்தபுரம் பத்மநாப சாமியையும், புலையரையும் தொடர்பு படுத்தும் கதையும் உள்ளது. பத்மநாபசாமி இருக்குமிடம் பழங்காலத்தில் அனந்தன் காடு என்னும் பெருங்காடாக இருந்தது. ஒரு சமயம் அந்தக் காட்டுக்குள்ளே ஒரு குழந்தை அழும் சத்தத்தைப் புலைப் பெண் ஒருத்தி கேட்டார். அழுகை கேட்ட இடத்துக்கு அவர் ஓடினார். தரையில் ஒரு குழந்தை கிடந்தது. அதை ஒரு நாகம் படம் எடுத்துப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. புலச்சிக்கு தெய்வீகமானது என்பதை அவர் உணர்ந்தாள் எடுத்துப் பசியமத்தினார்.

திருவாங்கூர் மன்னர் இந்தச் செய்தியை அறிந்தார். அந்தக் குழந்தை கிடந்த இடத்தில் பத்மநாபசாமி கோவிலைக் கட்டினார். முற்காலத்தில் அந்த இடத்தைப் புலையர்கள் ஆண்டதாகவும், அவர்களுடைய அரண்மனை இப்போதைய அரண்மனை இருக்கும் இடத்திற்கு அருகில் இருந்ததாகவும், திருவனந்தப்புரத்தை அடுத்து வாழும் புலையர்கள் இன்றும் நம்புகிறார்கள். சிவபெருமானிடமிருந்து தங்கள் முதாதையர்கள் மண்வெட்டியும், கோடாலியும், பெற்று காட்டை அழித்து நிலம் திருத்திப் பயிர் செய்ததாகவும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இந்தக் கதைகளெல்லாம் பிற்காலத்தில் கனவாகக் காற்றில் மறைந்துவிட்டன.

புலயர்களைத் தொடர்பு படுத்தி ஒரு விபரீத வழக்கம் பண்டைய தென் கேரளத்தில் இருந்ததாக வரலாற்று நூல்களிலிருந்து தெரிய வருகிறது. 1696 பிப்ரவரி 7 -ம்தேதி உமயம்மை ராணி இந்தக் கொடிய வழக்கத்தைத் தடைசெய்யும் வரை நடைமுறையில் இருந்ததாகத் தெரிகிறது. புலைப்பிடி (புலையர்கள் பிடித்துக்

படிப்பகம்

www.padippakam.com

கொள்ளல்) அல்லது புலைப்பேடி (புலையர் அச்சம்) என்பது இதன் பெயர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நம்பூதிரி அல்லது நாயர் பெண்களை இரவு நேரத்தில் புலையர்கள் தொட்டாலோ, கல்லால் எறிந்தாலோ, அல்லது கண்டாலோ கூட அந்தப் பெண் தீட்டுப் பட்டவளாகி விடுகிறாள். "கண்டேன். கண்டேன்" என்று அவன் கத்துவான். அதன் பிறகு அவள் திரும்பத் தன் வீட்டுக்குள்ளே நுழைய முடியாது. அந்தப் புலையனுடன் அவன் வீட்டுக்குப் போவதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லை. குடும்பத்தினர் பார்த்தால் அவளைக் கொன்று போடுவார்கள். இந்த வழக்கம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் நடக்கும் என்கிறார். அருள் திரு. சாமுவேல் மேட்டீர் கவிமணியும் இதையே சொல்லுகிறார். மார்ச் ஏப்ரலில் நடக்கும் என்கிறார். இந்தக் காலத்துக்கு புலப்பிடிகாலம் என்றும் பெயர். இதர காலத்தில் இது நடக்கவே முடியாது. நடந்தால் அந்தப் புலையரும் அவர் குடும்பமும் உடனேயே கொல்லப்பட்டுவிடும். புலயர்களுக்கு மட்டுமல்ல. பறையர்களுக்கும் (பறப்பிடி) வண்ணார்களுக்கும் (வண்ணார்பிடி) இந்த உரிமை இருந்திருக்கிறது. புலைபிடிக்காலத்தில் உயர்சாதிப் பெண்களைப் புலையரோ, பறையரோ, வண்ணாரோ தொடுவதை அல்லது காணுவதை அல்லது கண்டதாகக் கத்துவதை பிறர் காணவேண்டியதில்லை. இதற்குச் சாட்சி தேவை இல்லை மேல் ஜாதி பெண்கள் பயந்து அழுதபடி உடனேயே அவர்களுடன் போய் விடுவார்கள். ஆகவே இந்தக் குறிப்பிட்ட காலங்களில் இரவு நேரத்தில் மேல் ஜாதிப் பெண்கள் வெளிவர அஞ்சுவார்கள். ஒரு சாணார் (நாடார் அல்லது ஈழவர்) சிறுவனை. துணைக்குக் கூட்டிக் கொண்டு வந்தால் இந்தத் தீட்டு இல்லாம ஆகிவிடுமாம். ஆகவே அவர்கள் இரவு வெளியே வரும்போது சாணார் சிறுவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வருவார்கள். என்கிறார் சாமுவேல் மேட்டீர்.

இந்த விபரீத வழக்கத்தின் காரணம் என்ன? ■

(...தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த

தமிழக அரசு சட்டமியற்றுவது அவசியமான ஒன்று.

- 1960கள் தொடங்கி தமிழ் வழிக்கல்வியை நடைமுறைப்படுத்துவதாக வேடம் போடுவதும் விளையாட்டுக் காட்டுவதுமான ஆட்சியில் இருந்தோரின் வேடிக்கை இன்னும் தொடர்வது ஒரு விபரீதம்.
- தமிழை செவ்வியல் மொழியாக அறிவிக்க மத்திய அரசிற்கு தமிழக முதல்வர் கடிதம் எழுதுகிறார். தமிழக நீதிமன்றம் தமிழ் வழிக்கல்வியை அடிப்படை உரிமை என்பதன் பேரால் அடித்து ஒதுக்குகிறது.
- அரசு நிறுவனங்களுக்கு வெளியே தாய்த்தமிழில் பள்ளிகள் பொறுப்பான வழியை காட்டுகின்றன. இவற்றை நாம் இன்னும் விரிவு படுத்த பொறுப்பாளர்களோடு கைகோர்க்க வேண்டும்.
- தமிழில் கல்வி பெறுவது மட்டுமே தமிழனின் அடிப்படை உரிமையாக இருக்கமுடியும்.
- இதை சட்டமாக்குவது
- பிரச்சாரத்தின் மூலம் வெகுஜன உணர்வுகளோடு கலக்கச் செய்வது
- வேலைவாய்ப்பு, பொறியியல், மருத்துவ படிப்புகளில் முன்னுரிமை
- இதுவே தமிழ் அடையாளத்தைப் பாதுகாக்கும்.

திணை வெளியீட்டகத்தின் வித்தியாசமான நூல்கள்

தெறி (கவிதைகள்)	என்.டி.ராஜ்குமார்	விலை ரூ 25/-
உவர்மண் (கவிதைகள்)	நட.சிவகுமார்	விலை ரூ 25/-
தலித். சித்தாந்தம் (ஆய்வு)	வி.சிவராமன்	விலை ரூ 5/-
கொக்கறை (ஆய்வு)	முனைவர் ஞா.ஸ்டீபன்	விலை ரூ 30/-
இன்றைய மார்க்ஸீயம் நோக்கி (ஆய்வு)	முனைவர் ந.முத்துமோகன்	விலை ரூ. 30/-
பூட்டியஅறை (கவிதைகள்)	ஹெச்.ஜி.ரசூல்	விலை ரூ 30/-
சராசரி (கவிதைகள்)	ஆர்.பிரேம்குமார்	விலை ரூ 25/-
கவர்னர்பெத்தா (சிறுகதைகள்)	மீரான்மைதீன்	விலை ரூ 25/-
ஒடக்கு (கவிதைகள்)	என்.டி.ராஜ்குமார்	விலை ரூ 20/-

(த.க.இ.பெ.-திருவண்ணாமலை வெளியீடு)

தனிபிரதிகளுக்கு தபால் செலவு இலவசம்
5 பிரதிகளுக்குமேல் வாங்கும் விற்பனையாளர்/பதிப்பகங்களுக்கு 20% கழிவு.

நுல்களை அஞ்சலில் பெற

ச.அனந்தசுப்ரமணியன், 146, காவல்நிலையசாலை, மீனாட்சிபுரம், நாகர்கோவில்-1.

நூலுக்கான தொகையை (M.O. D.D) மூலமாக அனந்தசுப்ரமணியன் என்ற முகவரிக்கே அனுப்பவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

கௌரா ஏஜென்ஸீஸ்

G4, சாந்தி குடியிருப்பு, 2, கிருஷ்ணாபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600 014. ✆ : 826 2081

அமரர் கல்கியின் நூற்றாண்டையொட்டி 'பொன்னியின் செல்வன்', சிவகாமியின் சபதம்' வரலாற்றுப் புதினங்களை தொடர்ந்து **"அலைஓசை"** சமூக நாவலையும் வழங்குகிறோம். இதுவரையில் யாரும் வழங்காத அளவுக்கு ஏராளமான இலவச இணைப்புகள் ஆயிரம் பக்கங்களைக் கொண்ட நான்கு பாகங்களுடன் தயாராகும் **'அலைஓசை'** நூலுக்கு ரூ.250/- கொடுத்து முன்பதிவு செய்யும் வாசகர்களுக்கு சுமார் 1,400 பக்கங்களைக் கொண்ட (1/8 டெமி அளவுள்ள) கீழ்க்கண்ட 6 நூல்கள் இலவசம்.

தியாக பூமி, கள்வனின் காதலி மகுடபதி, சோலைமலை இளவரசி	நாவல்கள்
கணையாழியின் கனவு	சிறுகதைத் தொகுப்பு
கண் கொள்ளாக் காட்சிகள்	கட்டுரைத் தொகுப்பு

இச்சலுகை முன்பதிவு செய்து கொள்ளும் வாசகர்கள், நிறுவனங்கள், பள்ளிகள், நூலகங்களுக்கு மட்டுமே! 'அலை ஓசை' 5 பிரதிகளுக்கு மேல் முன்பதிவு செய்வோருக்கு சிறப்புக் கழிவு 10%. தபால் செலவு தனி. 7 புத்தகங்கள் அடங்கிய தொகுதிக்கு ரூபாய் 250/- பணமாகவோ / எம்.ஓ. / டி.டி. சென்னையில் மாற்றத்தக்க காசோலை மூலமாகவோ அனுப்பி முன்பதிவு செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

முன்பதிவு நிறைவு பெறும் நாள் : 31.7.2000
புத்தகங்கள் வெளிவரும் நாள் : 15.8.2000

படிப்பகம்

இது எங்களது சுதந்திர தினச் சிறப்புப் பரிசு